T. 7229

# வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்

பதிப்பாளர்
கா. லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம்

நெறியாளர்
ய. மணிகண்டன்
உதவிப்பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

T. 7229

T. 7229

# வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
கா. லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம்

நெறியாளர்
முனைவர் ய. மணிகண்டன்
தமிழ் இலக்கியத்துறை

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
2011

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயச் சான்றிதழுக்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
பதிவு எண்: 43011065

## *பதிப்பாளர் உறுதிமொழி:*

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறை மாணவராகிய **லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம். கா.** (43011065) என்னும் நான். வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் என்னும் தலைப்பில் சுவடிப் பதிப்பு பட்டயத்தின் திட்டப்பணிக்காக செய்த சுவடிப் பதிப்பு, என்னுடைய சொந்த முயற்சியால் செய்யயப் பட்டது என்றும், இதுவரை இச்சுவடியை எவரும் பதிப்பித்ததில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்
**லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம்.கா.**

இடம்: சென்னை.
**நாள்:**

# *நெறியாளர் சான்றிதழ்*

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறை மாணவர் **லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம். கா.** (43011065) **வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்** என்னும் தலைப்பில் சுவடிப் பதிப்பு பட்டயத்தின் திட்டப்பணிக்காக செய்த சுவடிப் பதிப்பு, அவருடைய செந்த முயற்சியால் செய்யயப் பட்டது என்றும், இதுவரை இச்சுவடியை எவரும் பதிட்'பித்ததில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

முனைவர். ய. மணிகண்டன்

இடம்: சென்னை.
நாள்:

## நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையினால் நடத்தப்பெறுகின்ற சுவடிப் பதிப்பு என்னும் பட்டயத்தின் வழியாக சுவடிகளைப் பற்றியும் சுவடிகளைப் பதிப்பிக்கும் முறைகளையும் கற்றுத் தந்த துறைத் தலைவர் முனைவர். வீ. அரசு ஐயா அவர்களுக்கும் சுவடிகளைப் பதிப்பிக்கும்போது எழும் யாப்பு தொடர்பான சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கும் முறைகளைக் கற்றுத் தந்ததோடு திட்டப்பணிக்கு என்னை நெறிப்படுத்தி வருகிற முனைவர். யா. மணிகண்டன் ஐயா அவர்களுக்கும் சுவடிகளைக் கையாளும் முறைகளையும், சுவடிகளைப் படியெடுக்கும் பயிற்சிகளையும் எனக்குத் தந்த விருந்தின விரிவுரையாளர்கள் சி.இளங்கோவன், லக்ஷ்மி. அவர்களுக்கும் திட்டப்பணிக்காக சுவடிகளைத் தந்து உதவிய அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தார்க்கும் சுவடிப் பதிப்புப் பணிக்காக எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த வருகினற என் குடும்பத்தினருக்கும் என்னுடைய சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கா. லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம்

பதிப்பாளர்.

## பதிப்புரை

சுப்பாடி கள்ளப் பிரான் பாகவதன் சீதாராம தாசன் என்பவரின் மகனான கோவிந்தன் என்பாரால் இயற்றப்பட்ட வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் என்னும் இச்சுவடி, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக சுவடிகள் விளக்க அட்டவணையில் சு-1534 என்ற எண் கொண்ட சுவடியின் ஒரு பகுதியாக உள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள காப்பு வெண்பா நேரசை வெண்பாவின் இலக்கணம் சரியாகப் பொருந்தும் வகையில் பதிப்பிக்கப் பட்டுள்ளது.. பெரும்பான்மையான இரட்டை ஆசிரிய விருத்தப் பாடல்கள் மா,மா, காய், மா, மா, காய் என்ற விருத்தப் பாவியல் உரைக்கும் வாய்பாடும், சில பாடல்கள் காய், காய், காய், காய், காய், காய் என்ற புதிய வாய்பாடும் பொருந்தி ஒந்துள்ளமையால் அப்பாடல்கள் அவ்வவ்வாய்பாடுகளைக் கொண்டு சீராகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. சில இரட்டை ஆசிரிய விருத்தப் பாடல்களில் வாய்பாடுகள் கரடுமுரடாக உள்ளமையால் எதுகை, மோனை, இயைபு முதலிய தொடை நயங்களின் அமைப்பின் அடிப்படையில் பதிப்பித்துள்ளேன்.

ஆனால் நூலுக்கான அவையடக்கப் பாடலை மட்டும் சீரான யாப்பு அமைப்பில் பதிப்பிப்பது சிக்கலாக உள்ளமையால் அதனை நான்கடிகளாகப் பிரித்துப பதிப்பித்துள்ளேன்.

வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் என்ற இந்நூலின் ஐந்தாவது பருவமாகிய முத்தப் பருவத்தின் ஏழாவது பாடல் மட்டும் கிடைக்கவில்லை. கடவுள் வாழ்த்து சுவடியின் பின் எழுதப் பட்டிருப்பதால் சுவடியில் உள்ளவாறே நூலிலும் பதிப்பிக்கப் பட்டுள்ளது. கடவுள் வாழ்த்திற்குப்பின் அந்தணர் சிறப்பு, அரசர் சிறப்பு, வணிகர் சிறப்பு என்னும் தலைப்புகளில்

இரட்டை விருத்தப் பாக்கள் உள்ளமையால் அவையும் சேர்த்து 106 பாடல்கள் கொண்ட நுஸக இந்நூல் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலிலுள்ள காப்பு வெண்பா மற்றும் அவையடக்கம் தவிர, பிற 104 பாடல்களுக்கும் பாடல் முதற்குறிப்பு அகரவரிசை அமைக்கப் பட்டுள்ளது.

கா. லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம்

பதிப்பாளர்.

## நூல் மதிப்புரை

கடவுளரையோ மக்களுள் சிறந்தோரையோ குழந்தையாக பாவித்து, காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை அம்புலி முதலிய ஏழு பொதுப் பருவங்களும், ஆடலராயின் சிற்றில் சிறுபறை, சீறுதேர் எனவும் பெண்டிராயின் கழங்கு, அம்மானை, ஊசல்(நீராடல்) எனவும் மூன்று சிறப்புப் பருவங்களும் என பத்து பருவங்களில் பாடல் பாடுவது ‘‘பிள்ளைத்தமிழ்” என்னும் பிரபந்த வகையின் இலக்கமாகச் சொல்லப் படுகிறது. இதனை,

"குழவி மருங்கினும் கிழவ தாகும்"

தொல் புறத்: 25.

என உரைத்துள்ளார் தொல்காப்பியர்.

திருவைகுந்த பெருமாளின் மீது கோவிந்த தாஸன் என்பவர் பாடிய வைகுந்தநான் பிள்ளைத்தமிழ் என்ற இந்நூல், பிள்ளைத்தமிழ் இலக்கியத்துக்குரிய இலக்கணம் பொருந்துகின்ற வகையில் அமைந்துள்ளது. பத்து பருவங்களுக்கும் ஒரு பதிகம் பாடப் பட்டுள்ளது.

இந்நூலில் உள்ள காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவிலும், பிற பதிகப் பாடல்கள் இரட்டை ஆசிரிய விருத்தத்திலும் பாடப் பட்டுள்ளன. பத்துப்

பருவங்களும் முற்றுப் பெற்ற பின், வைகுந்த பெருமாள் கோயில் கொண்டுள்ள திருவைகுண்டத்தையும், நூல் எழுதப்பட்ட தமிழ் மொழியையும் வாழ்த்தி ஒரு இரட்டை விருத்தப் பாடலும், அவையடக்கமும் உள்ளன. அதன் பின்னரே கடவுள் வாழ்த்து பாடப் பட்டுள்ளது.

இந்நூலை இயற்றியவர், சுப்பாடி கள்ளப்பிரான் குமாரன் கோவிந்ததாஸன் என்பவராவார். இவர் பெருமாள் பக்தராகவும், அந்தண சமயத்தைச் சார்ந்தவராகவும ˙இருந்திருக்க வேண்டும். வைகுந்த நாதன் பிள்ளைத்தமிழ் என்னும் இந்நூல், வைகுந்த பெருமாளின் மீது பாடப்பட்டுள்ளதோடு இந்நூலில் இராமாயணக் குறிப்புகளும் இராமன், சீதா போன்ற இராமாயணத்தின் பாத்திரப் பெயர்களும் நிறைய இடங்களில் வந்துள்ளமையாலும் இந்நூல் வைணவ சமய நூல் எனபதில் ஐயமில்லை.. எனினும், கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து. நால்வருண பாகுபாட்டில் முதல் மூன்று சாதிப் பிரிவுகளான அந்தணர், அரசர், வணிகர் என்பாரைப் புகழும் வண்ணமாக, அந்தணர் சிறப்பு, அரசர் சிறப்பு, வணிகர் சிறப்பு என்னும் தலைப்புகளில் இரட்டை விருத்தப் பாக்கள் இடம்பெற்றுள்ளமையால், இந்நூல் எழுந்த காலத்தில் வைணவர்களிடையே வைதீக மரபின் தாக்கம்

மலிந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது.

இங்ஙணம் வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் என்னும் இப்பிரபந்தம் வைணவ சமயத்தையும் வைதீக மரபினையும் தழுவி அமைந்த நூலாக உள்ளது.

## உள்ளே

1. காப்புப் பருவம்
2. செங்கீரைப் பருவம்
3. தாலப் பருவம்
4. சப்பாணிப் பருவம்
5. முத்தப் பருவம்
6. வாரானை(வருகைப் பருவம்)
7. அம்புலிப் பருவம்
8. சிற்றில் பருவம்
9. சிறுபறைப் பருவம்
10. சிறுதேர்ப் பருவம்
11. வாழிய
12. அவையடக்கம்
13. கடவுள் வாழ்த்து
14. அந்தணர் சீறப்பு
15. அரசர் சிறப்பு
16. வணிகர் சிறப்பு
17. பாடல் முதற்குறிப்பு அகரவரிசை

# *வைகுந்தநாதன்*

# *பிள்ளைத் தமிழ்*

*வைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ் சுப்பாடி*
*கள்ளப்பிரான் பாகவதன் சீதாராமதாஸன்*
*குமாரன் கோவிந்தன் ஏடு.*

## (அ) <u>காப்புப் பருவம்</u>

(நேரிசை வெண்பா)

1.செந்திருவாழ் மார்பன் திருவேங்கடச் சதகம்
பைன்தமிழர் நீதிநெறி பாடவே வந்தருளுங்
கார்முகமும் சங்கத்தான் கைத்தாம ரையணிந்த
கார்முகஞ் சங்கத்தான் காப்பு.

திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்க் கவிதை

**தெய்வ வணக்கம்**

(இரட்டை ஆசிரிய விருத்தம்)

2. செம்பொன்னி னின்பநிறை சூதுமறை
பழுத்தொழுகு தெள்ளமுத சாரமென்னுந்
திவ்யப்ரபந்த நாலாயிரமு நாதமுனி
தேறவ ருள் செய்துகந்து

தம்புகழ்வி ரித்ததைக்கண் டுலகெலாந்தொழந்
தகைமேவு குருகை தன்னில்
தயவுடனுதித்த மகிழ்மார னாவீரனிரு
சரணமல ரடிபணிகுவாம்
தும்பிமுரல்சோலை சூழ்பலவி
னிடைமுதிர்கனிச்
சுழைநறவு தோய்த்து மதமாத
தொடர்பிடிக்குதவி மகிழ்திரு வழுதிநாடனுயர்
தூயபிரமன் வணங்கும்
நம்பரமன்வை குந்தநாதன் மணிவண்ணன்மால்
நவநீதசோ ரன்மாயன்
நாரணன்சீர் பரவுபிள்ளைத் தமிழ்க்கவிதை
நவிலுமென் சொற்றழையவே. (க).

3. முப்பரஞ்சோதி தனைமூர்த்தி திருநாபிதன்
முளரிவந் தவதரித்த
முனிவனின்புற நாவிலுரை வாணிகலைமாது
முத்தர்புகழ் காயத்திரி
சேப்பரிய பனுவலாள் ஊரபூரவாகினி
செழுந்தமிழுக் குதவிசெய்யும்
செல்விபாரதி யுலகமாதா வெனுந்தேவி
செம்பொற்பதம் பணிகுவாம்
மைப்புயல் முழங்கவரி யிபமென்றுகுதி
பாயும்மலையாவு களிகூர்ந்திடும்

மகிமைபெறுதென் வழுதிநாட
னென்குலமுழுதும்
மனந்துகந்த டிமைகொள்ளும்
அப்பன்வெங் கடவாணன் வைகுந்தநாத
னினையடியேத்துப் பிள்ளைக்கவி
ஐந்திலக் கணமுமத னுட்பொருளும்
ஆமைந்தெனது சொற்றளையவே. (உ.).

4. அண்டர்தவ வேதியர்கள் பூசுரர்கள் மன்னர்கள்
அனைவருமி றைஞ்சியேத்தும்
அம்புவி புகழப்புதுவை மேவியுரை பட்டர்கொன்
அருமைமக ளெனவுதித்து
வண்டுளப மணியரங்கே பாமாலை
வாய்மலர்ந்த ருளியினிய
மதுவொழுகு பூமாலைசூ டிக்கொடுத்த
செகமாதா
விழைபா வுவாந
கொண்டலக டல்மொண்டு மலைசென்று
பொழிகின்ற
புனல்குடவளைக் குலமதளோடும்
குஞ்சைக்கொடு சாதநில கனகமுத்தங்
கொளித்துலவு பொருனாநதி
தண்டுறை வளம்பெருகும் தென்றிரு வைகுந்த
நகர்தன்னில்வளர் எங்கள்பெருமான்

சலசையணி மார்பனிசை பாவுபிள் ளைக்கவிதை
சாற்றுமென் சொற்றளையவே. (ரு).

5. செய்யதே மாப்பலவாம் பைமுதலியகளித்
தேனுமலர்பொ ழியுநறவுஞ்
நேர்ந்துசென் னெல்கழனி பாய்ந்துபைங்
கூள்வளர்
திருக்கச்சி தனிலுதிததோன்
வையகத் தகழிமிசை வார்கடலை நெய்யிட்டு
மார்த்தாண்ட தீபமேத்தி
மங்கலச் சொன்மாலை செங்கண்மால்
கழல்புனைய
மறைமுனிப தந்துதிப்பாந்
துய்யக மலத்தன்வந் தடிதொழுது சுருதிமுறை
சொல்லியா ராதனைசெய்
சுகமுனியை நிர்பரம பாகவதர் பல்லாண்டு
துங்கமுட னோதிநிற்ப
பையரவின் விடமுண்ட பண்ணவர்மு தற்கடவுள்
தரைமீதி றைஞ்சியேத்த
பாவாணர் புகழ்ந்தென் வைகுந்த நாதனிசை
பகருமென் சொற்றளையவே. (ச).

6. ஓம்நமோ நாராய ணாவென்னுநா மமுச்சரித்
துள்ளங்க ளிப்ப
புறுமனபு தகயினிலா ரவநேய பெருகுயென
புருகுநெஞ் சிடுதிரியேன்
ஞானதீ பச்சுட ரெடுத்தாத ரித்தமுனி
நறசாணி தமபரவுவாம்
நறைவண்டு குழல்மெய்ப்ப வதுபொரு
திடைதுவளும்
நடைகண்டு பிடியொதுங்கும்
மானனையா வேல்விழி யாமையல் கொல்வனப்பு
நிறைமந்தபொ ருள்மேலாசையால்
மருவிப்பி ரிந்தவரை வாவுகண்டுள் ளமகிழ
மாதர்முக முறுவலெனவே
கானமா செழுங்கமல முல்லைமல ரெங்குமலி
காவுசூழ்திரு வைகுந்தைக்
கள்ளப்பி ரான்சரிதை யின்புற்று நவிலுமென்
கவிதையின் சொற்றளையவே. (ரு).

7. திருவும்பொன் மேனியு மருக்கனிற்முஞ்
செவ்விதிக ழாழியுஞ்சங்கமும்
சிந்தையுட் கண்டுவந் தேத்தியந் தாதிமொழி
செய்துமகிழ் பரமயோகி
தருவன மமலிகளிக ளிசைபாட மஞ்ஞையத்
தண்டலைகண் மீதிலாகுந்

தண்கமல வாவிசூழ் மயிலைபிரான் தமிழ்தவ
இனிவனி னிதுகாக்கப்
பருவமுகில் சொரியுமிரு நிதியும்நவமணிகளும்
பணிவழுது யிரத்தழுத்தும்
பகலொளி பரப்புந்தென் வைகுந்த நகர்மேவும்
பண்ணவன் வேதநாலுங்
கருதரிய முத்திக்கு வித்தான தேவனைக்
கருணைபொழி புண்டரிகக்
கண்ணனைப் பொற்பூவை வண்ணனைப்புகழுமென்
கவிதையின் சொற்றளையவெ. (சு).

1. நான்முகனை நாராய ணன்படைத் ததுவுமந்
நான்முகனான முகமதாய
நக்கனைய ழித்ததுவும் மிக்கான தேவன்அந்
நாராயண னென்பதனையும்
மானிலத் தோரரி யவோதவென் றின்பமொடு
மழிசைவந்த வதரித்தோன்
மதிலரங் கத்துறையு மமலனைக் கண்டகண்
மற்றொன்று காணுதென்க
கானிசைப் பொருந்துகவி யீரைந்து
ரைத்துமால்
கழலினைப்பு னைந்துமகிழ்வோன்
கனகமணி யாரத்தை யன்பாக வாரென்று
கட்செவிதனிற் கையிடுந்

தென்முரலு மாலையணி சொர்கொ னிம்மூவர்
சேவடிப்பொ துபணிவாந்
தென்வைகுந் தைக்கள்வர் தன்புகழ்
விரிக்குமென்
செந்தமிழ்ப் பாத்தழையவே. (எ).

2. ஈரேழ்பெரும் புவனமெங்கு நிறைகின்றதோ
ரீசநார ணனென்பதை
யிருக்குமறை யோதியுந்தெ ரியாதநுட்
பொருளைஇவ்
வுலகுளோ ரறியவே
வீரநெடு வன்றிரல் கள்சேர்வ ழுதிமன்னவன்
வியப்புறக் கிழியறுத்து
மேன்மைதிகழ் பல்லாண்டு பாடிமகிழ்
பட்டர்கோன்
மெய்ப்பதப் பொதுதனையுஞ்
சீர்கொண்ட திருமாலை யாலரங் கேசனே
தெய்வமென்ற றிவையுணரும்
செல்வனிரு கழலினையு முன்னிமுடி சூடியனு
தினமுமஞ்ச லிசெய்குவாம்
பாரதிக்கி றைவனா ராதனைசெய் தடிதொழும்
பங்கேருகக் கண்ணனைப்
பார்புகழ்தென் வைகுந்தை மேவியுறை
மாயனைப்
பகருமென் சொற்றழையவே. (அ).

10 மன்னுயிர்க ளுய்யவெத் ததினுறை
நுட்பொருளை
வுாய்த்ததிரு வாய்மொழியேன்
மாறன்ப ணித்ததற் காறங்க முறைசெய்ய
வையகத்த வதரித்தோன்
பன்னுமுத்த மிழினாற்நாற் கவிதையு
ரைசெய்து
பரமனடி கண்டுவந்த
பரகாலன் மங்கைத்திரு மணவாளன்
இருசரண
பங்கெருகப் போதையும்
நன்னெறியில உய்ப்பதற் கின்னிலந்தன்
னில்வந்த
நாவிர னெயலாது
நான்வெறுதெய் வங்களறி யெயெனுங்க
விதைநாட்டி
மகிழ்மது ரகவியின்
பொன்னெழில் பொருந்துகழ றன்னையு
நிதந்தொழுது
புங்கமுட னேதுதிப்பாம்
பொங்குபுகழ் வைகுந்தை தங்கியுறை
கள்வனைப்
புகலுமென் சொற்றழையவே (சூ).

11 செகமீது சேதனர்க ளுய்ந்துகரை யேறிடச்
செவ்விபே ராச்சியத்தே
செப்பிநா ராயணன் பானெனக் காட்டியே
தெளிவித்த கருணைவள்ளல்
இகபர மிரண்டினுங் கதியுதவு மாறன்அடி
யிணைமலரின் வாழுமன்பன்
இன்பநிறை பூதூரில் வந்துமகழை் எதிராச
னிருசோணி தம்பரவுவாங்
ககனத்தை முடிவளர் கதலியின் கனிதனைக்
கமழபுதிய நறவுதோய்த்துக்
கடுவென முசுவுக்கு தவுநாட னெழிலைந்
தருக்காமன் வந்தேவ ணங்கும்
புகழ்மருஉ வைகுந்தை நாதனிசைப்
போற்றுநற்
பொலிவுமிகு செந்தமிழ்க்குப்
பொருந்துமீ ரைந்தழகு மேய்ந்து மனதின்புறப்
பகலுமென் சொற்றளையவே. (ய).

12. சந்தணக் காவுதிகழ் செம்பதும வாவிசூழ்
சாந்தூரி லவதரித்தோன்
றண்குரு கைமேவும் பராங்குசன் வியந்ததொரு
தாசனெனு நாமமுறுவோன்

எந்தனிரு புயமதிற்சங் காழிதனை
யணிந்திம்மை
யினுமறு மைதனிலும்
ஏழேழுபி றப்பினுமு வந்துவிலை கொண்டுமகி
ழிறையவன் பெரியநம்பி
கந்தமரு வுஞ்சரண பங்கயப் போதையும்
கருதுததி யாக்குமுத்தி
காட்டுமண வாளமுனி தாட்டுணை
யிரண்டையுங்
கவினுடனி தம்பணிகுவாஞ்
செந்தரும டந்தையருள் சந்ததநி றைந்துலவு
தென்வைகுந் தைக்கள்வனை
தேவாதி தேவனெனு மூவர்க்கு முதல்வனைச்
செப்புமென் சொற்றளையவே. (யக).

**முதலாவது, காப்புப் பருவம் முற்றும்....**

## (ஆ) செங்கீரைப் பருவம்

13 பூமாது கருணைபொழி சீர்மருவு வயிணவர்கள்
புனிதமறை யோதிநிற்ப
போதகமு கக்கடவுள் ஆறுமுகன் மாதவர்கள்
புத்தெளிர னைவருடனே
காமாரி வந்தடிப ணிந்துமன தார்வமொடு
கைதொழுது புடைநெருங்கக்
கஞ்சமல ராசனன்வ ணங்கியெப் பொழுதினும்
கருதியாரா தனைசெய்க
கொமானெ னுந்தலை வர்பாவா ணர்சூழ்ந்து
கவிகொண்டுநின் கழலிலணிய
குவளைவிரி மலாதனை நிகருமிரு
விழிகொண்ட
கோசலைபெறுங் கண்மணியே
தேமாவெருஞ் சொல்மொழி மாமேவு
மணிவண்ணன்
சேங்கீரை யாடியருள்
தேன்திருவை குந்தைநகர் நின்றுநித
மகிழ்கள்வ
செங்கீரை யாடியருளே. (க).

14 வுருவமைந்து புவிமாது தவமே கருதி
யன்புடனி யற்றுமன்னாள்
அருள்கொண்ட ளித்தவர் பாலனஞ் செய்வதற்
கவதரித்தொங் குபொழுதிற்
பூவையொழி யைப்பொருவு மேனியெழி
லுங்கமலை
பொற்பிலகு மணிமார்பமும்
புரிசங்கு நெமிகதை வாடனுவோ டைம்படை
பொறித்தவொரு நான்குகரமுங்
கோவையின்க னிநிகர்செவ் வாயுமிரு
காதிலணி
குண்டல முமந்தகாசக்
குறுமுறுவ லும்பதும விழியுமணி மகுடமுங்
குல்லைமல ருங்கணுற்றுத்
தேவகியு கந்துபுகழ் தேவாதி தேவனே
சேங்கீரை யாடியருளே
தென்திருவை குந்தைநகர் நின்றுநித
மகிழ்கள்வ
செங்கீரை யாடியருளே. (உ).

15 மேதினிப் பார்மது தீரமன தெண்ணிநீ
மேவுபாலா ழிநீங்கி
மேதாவி யானவசு தேவர்க்கும கனாகி
மெல்லியல் சோதையென்னும்
மாதுமுலை யுண்டுகளி கூர்ந்துசக டாசுரனை

மாய்ந்துவிழள் வேயுதைத்து
மங்கையென வந்ததொரு பேச்சியிர்கொண்டமா
மணிநிறப் பொற்கொண்டலே
காதுவெற் கண்ணிநாற் பாதநூ புரவொலிகள்
கருதியென மென்றுசேவலக்
காமுறுந்தி ருவழுதி நாடகங் குலநாதர்
கங்கைநதி யொழுகுபாதச்
சீதாம லரின்வருகோ தைப்புகழ் மணவாள
செங்கீரை யாடியருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித
மகிழ்கள்வ
செங்கீரை யாடியருளே. (ங).

16 நந்தன்ம னைவந்து குடிகொண்டு விளையாட
வந்நாகனை துறந்துபாடி
நகர்மேவி யெண்ணிரண் டாயிரநது
கைகொண்ட
நங்கைகோ வியங்களென்னும்
இந்துநுத லார்களுறை சேரியிட மெங்கும்
எய்ந்தகோலங் கள்தம்மை
இசைப்பயிலும் காயாள நாரதன் கண்டடி
இறைஞ்சவருள் செய்தமுகிலே
சந்தகிற பீலிநவ மணிகளங் காடியின்
றன்மையென்ற திசெயிப்பச்

சலஞ்சல நிறைந்துதிகழ் பொருணைமா
திவளத்த
கைமருவு வழுதிநாட
சிந்துரத் தில்தமணி யிந்திரைத்தன் மணவாள
செங்கீரை யாடியருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித
மகிழ்கள்வ
செங்கீரை யாடியருளே. (ச.).

17 காவிலுறை முவையிசை கேட்டுக்க ளிப்புடன்
கமலமதில்வாமுமன்னன்
கருதன்பெ டைதன்னை முயங்கிமன
தின்பமொடு
கண்படைபொருந் துமெழில்சேர்
வாவியரு கற்றுவளர் கெதகைகு ரண்டமென
வாளைபுன லூடொழிக்கும்
மாங்கனி பிதிர்ந்தொழுகு சாறுநற
வும்பெருகும்
கிமைபெருதிரு வழுதிநாட
மேவுசமர் மீதிரத மேலவரு கிரீடிக்கு
மேய்ப்பொருளைத் தமுகிலே
மேலான பலகோடி யண்டப ரப்பினுள்
வேதன்புரா ரிமுதலார்
தேவர்க்கும் முதினவரு தேவிக்கும் மணவாள
செங்கீரை யாடியருளே

தென்றிருவை குந்தைநகர் நின்றுநித
மகிழ்கள்வ
செங்கீரை யாடியருளே. (ரு.).

18 காவுறை மந்திய ருந்திட முக்கனி
கடுவன ளிப்பதனை
கண்டிட மள்ள நாற்றம றுத்தது
கனிகொடு விட்டெறியும்
பூவிரி வாவியோர் சாசர மென்முகில்
புனலைநு கர்ந்துடனே
பொனவெனோழில் முத்தொடு சொனைவ
ளங்குபோ
லன்றிகள் வளநாட
தாவர சங்கம் தொங்கு நிறைந்த
துயளபா நற்பொளே
சங்கர னுக்குயர் கங்கை கொடுத்த
சரோருக பொற்சரணா
தேவர் தொழுங்கரு ணாநிதி ரகுபதி
செங்கோ செங்கீரை
தேனிசை துளவனி வாளிள வரசே
செங்கோ செங்கீரை. (சு.).

19 ஆதவ னைத்தொ டுநீண்டி லும்புய
வுண்ணிய சோலைகளும்
ஆம்பவ ளக்கொடி போலிள மங்கை
பாடல ரங்குகளும்
போதமு ரைத்திடு நங்குர வோர்கள்
பொருந்துநன் மாழிகையும்
பொற்றொடி மெல்லியர் வதுவையு மேவிய
புனிதந கர்க்கிறைவ
மாதுது ரோபதி மாயவ னேயென்
வன்றுயர்க ளையெனலும்
மனனவை முன்னவள் கூறை யர்வகை
வாமதளித் தருளுஞ்
சீதம றைபோருள் மீதுறை கனியே
செங்கோ செங்கீரை
தேனிசை துளவனி வாளிள வரசே
செங்கோ செங்கீரை. (எ).

20 பூவல யத்துள காவலர் விப்பிரர்
புகலரு மாமறையோர்
புங்கவ ரன்போடு நின்விளை யாடல்
புகழ்ந்து பணிந்திடவே
மாவிரி பூநற வுண்டுக ளிப்போடு
வண்டுக ளிசைபாடும்
மஞ்ஞைகள் தோகை விரித்து மதாப்போடு

மாடமத னிலாடும்
காவுறை யோதிம மங்கையர் மென்னடை
கண்டுநிகத் தொடரும்
கதளிநெ ருங்கிய முளரிவ ளஞ்சேரி
கவின்மிகு வளநாட
தேவகிம ணிவயிர வரகொள் தளிரே
செங்கோ செங்கீரை
தேனிசை துளவனி வாளிள வரசே
செங்கோ செங்கீரை. (அ).

21 மங்கையர் கெங்கைசு மக்கரி தாய்மிக
மறுகிறு நுண்ணிடையை
வாளரி யாமென வேளம ருண்டு
வெகுண்டும றைந்துறையும்
போங்கரின் மீதுத வழ்ந்திடு திங்கள்
புடைக்குமி ரலருவி
போற்புறு சோலைவ ளர்க்குந லந்திகழ்
போதியம லைக்கிறைவ
சுங்கைத ரித்தவ னங்கை யில் வைத்த
குபாலநி றைந்திடவே
கருணை யுடன்பலி யன்று கொடுத்த
குளக்கஞ்ச மலர்க்கரனெ
சேங்கம லத்திரு மேவுமின் னமுதே
செங்கோ செங்கீரை

தேனிசை துளவனி வாளிள வரசே
செங்கோ செங்கீரை. (கூ).

22 அங்கண்வி சும்புறைத் தேவர்த போதன
ரனைவரு மடிபாவி
அன்புட னின்திரு லீலைத னைக்கண்
டகமது களிகூறப்
புங்கமு டன்புன லுருச்சி யுந்திகழ்
புழதிகடுக் கையிளம்
புல்லோடொ ருக்கலா சங்கும ணித்திரன்
புனைசிங்கம் பூவென்றும்
சங்கர னைப்பெறு பங்கய னைத்தரு
தாயோத ரமுகிலே
தனிமதி வெண்குடைய வன்நெ டுங்கொடி
தம்மிலி சைந்துவர
செங்கை கொளம்ப டைதங கியமா
செங்கோ செங்கீரை
தேனிசை துளவனி வாளிள வரசே
செங்கோ செங்கீரை. (ய).

**இரண்டாவது செங்கீரைப் பருவம் முற்றும்**

## (இ) தாலப் பருவம்

23 மதியைநி கர்த்ததி ருநுதவிற் மருப்போற்
சாந்துத்தி லகமிட்டு
வதியுங்கள பமுலைம டவார்வா ளாமணி
மாளிகைச் சிறப்பும்
உதயகி ரணன்வ லஞ்சூடி வோங்கும்
பொன்மா மேருகிரி
யொத்த நெடுந்தொ ணிவகுப்பு முயரும்
புரவித்தி ரட்செறிவும்
முதியத வத்தொரு பயமறை மொழியுங்
குளகச்சா லைகளும்
முகில்போ லொலிக்கு மாச்சியலும் முயற்சி
யிருத்தும் பதிக்கரசே
கதிரோன் குலத்து தித்தசெழுங் கனியெ
தாலேலோ தாலேலோ
கற்றோர்து திக்கும்திரு வைகுந்தை கனியே
தாலேலோ தாலேலோ (க).

24 சுங்கத்த மாரக்கீ டையூறு
தவிர்க்கச் சுலதித னைமறந்து
சரையுவேறு மாந்தித் துறைவன்
றனக்கு மகனென்று தித்திடுநான்
யெங்கள் முதேகண மணியே
இரவிகுலத் துக்கொளி விளக்கே
இருமைப் பயனுந் தருநிதியே

யிளயோந் தவமே யிளங்களிறே
வங்கக் கடல்சூழ் புவித்தலைவர்
மதலை வாயெனக்கோ சலைமடமான்
மகிழ்வுற் றிருத்தும் பொன்னூசல்
மருவித் துயிலு மணிவண்ணா
பங்கே ருகனும் பசுபதியும்
பணியும் பரனெ தாலேலோ
பதிமர் பாவுந்திரு வைகுந்தை
பதிவா ழரசே தாலேலோ. (உ.).

25 முல்லை முறுவல் பவளயிதழ்
முளரி வதனங் குரும்பைமுலை
மூரிக் குழலார் நடைநிகர்த்த
முகில்போல் மருவும் பிடிக்குழவுஞ்
செல்லின் முடிக்க மென்வார்ப்புச்
தினமும் பொருந்து மதவேழத்
திரமுஞ் செறிந்த நெடுஞ்சோலை
திகழு பதிவா னிழலரசே
குரளுஞ் செறிந்த நெடுஞ்சோலை
வில்லை வளைத்துக் காத்துநின்ற
செயன்று யர்ந்து டைப்பதற்காய்
விளங்கு மறையொன் மைந்தர்களை
விடுப்போ டளித்த பெருமானே
குல்ல நறுதா ரணிநீலக்

குன்றே தாலே லோதாலேலோ
கோகந கைவாழ்தி ருவைகுந்தைக்
கோவே தாலேலோ தாலேலோ. (ங.).

26 இசையுந் திருவும் பெரும்படையு
மெய்ந்த மனக்கம் பீரமுடன்
இரைக்குங் கடலை யுடுத்தபுவி
யேங்குந் தளிச்செய் சொல்செலுத்தி
ஆசையாப் புகழ்பெற் றரசாளும்
அண்ணல் தனக்கு மகவெனவே
அயோத்தி நகர்வந் துதித்திருநாள்
அன்னை யெனும்சிற் றவைமனையில்
வதையார் கூனி கூன்புடைக்க
வரிவில் வனைத்துண்
டையைத்தெறித்து
மகிழ்வோ டிருந்து மனமுவக்கும்
மணியே அமரர் தொழுங்கள்வ
திசையா னைத்தோ றினம்பணியுஞ்
செல்வக் கொழுந்தே தாலேலோ
செம்பொன் மதில்சூழ் தென்வைகுந்தைத்
தேவே தாலேலோ தாலேலோ. (ரு.).

27 கலைசொச் சியைப்பொ ருவுமுகங்
கனியைக் கடுகசு மினியமொழி
காவழ மலரைச் செறுத்தமொழி
கணிகை மடவார் காப்பேந்த
மலைபொற் புயத்து வயவேந்தர்
வணங்கி நெருங்கக் குருகையர்கோன்
வளங்குந் திருவாய் மொழிப்பிரபந்தம்
மறையொர் நவில வாச்சியங்கள்
அலைபோலொ லிப்பச்ச துர்தேமார்ப்பக்
கொடிகள் புடைத யங்க
அமரர் கரங்கள் குவிப்பவிளர்
வணியும் பதிவா னிளவரசே
சிலைவா ணுதற்கோ சலைதவத்தின்
நிருவே தாலே லோதா லேலோச்
செம்பொன் மதில்சூழ் தென்வைகுந்தைத்
தேவே தாலேலோ தாலேலோ. (ச.).

28 தண்டா மரைபூந் தவீசுறைவோன்
தருக்கா வலனு மைக்கதிபன்
சைலந் துளைக்க வயிர்துரந்தரன்
றபனைச் சகியைங் கான்முதலோர்
கொண்டாட் டங்கொண் டுளங்குளிர்ந்து
குளித்துத் தொழக்கோ வியருடனே

குடையும் புனலில் விளையாடுங்
கோவே யாயர் குலதிலகர்
வண்டார் குறைச்சத் தியபரமை
மார்பந் தழுவும் மணவாளா
மருவுஞ் சீவ கோடியெல்லாம்
மகிழ்வோ டுன்றன் வயிற்றடக்கி
பண்டா லிலையிற் கண்டுயிலும்
பரமா தாலேலோ தாலேலோ
பதினமா பரவுந் ன்வைகுந்தைப்
பதிவா ழரசே தாலேலோ தாலேலோ.

(சு.).

29 செய்ய திருவாயப் பாடிநகர்ச்
சிறுவர் தம்மோ டருகானஞ்
சென்று பசுவி னிரைமேய்த்துச்
சின்னா ளாடல் புரிந்ததற்பின்
வெய்ய சமரந் தன்னிற்பருதி
வெயிலை யாழி கொடுமறைத்து
விசய னுயிரைக் காத்தளித்து
விளங்குங் கருணா நிதிக்கடலே
துய்ய தவத்தொ ருளத்துமறைச்
சிரத்துத் தொழும்பும் பூண்டகுலத்
தொண்ட ரிடத்து மாரன்மொழி

சொல்லுந் தலத்து மயனாலும்
யெய்தற் கரிய பெரும்புத்தது
மிருக்கும் பொருளே தாலேலோ
யிருக்கு முழங்குந் திருவைகுந்தைக்
கினிதா மமுதே தாலேலோ. (எ).

30 படவாளர் வம்பூங்க தலிபசுந்
தேன்குமு தஞ்செப் பெனவே
பகருநி தம்பகு ரங்கிசைவாய்
பருத்தத னஞ்சே எழிலாயர்
மடவார்கூ ரைதனைக் கவர்ந்து
வளருங் குருந்த மரத்தேறி
வாழ்த்துங் குரவை தனைக்கேட்டு
மகிழ்வுற் றிருக்கும் மணிவண்ணா
வடபத் திரமும் புளிங்குழ
யுமதில் சூழரங்க மாங்கரும்
மறையோர் புகழும் மதியை
நிகர்த்த வெண்ணிறப் பரமா
கடலும் பொருந்திக் கண்டுயிலும்
கருமா முகிலே தாலேலோ
கற்றோர் துதிக்கும் திருவைகுந்தைக்
கனியே தாலேலோ தாலேலோ. (அ.).

31 பச்சைப் பொருந்துங் குழன்மடவார்
படிந்த புனற்பொன் விரிதிரையின்
பாவைப் புலவு தனைநீக்கிப்
பகருஞ் சாந்தங் கமழ்நாடா
கொச்சை யாயர் குடில்வளர்ந்து
கோவி னிரையைக் காப்பதற்குக்
குன்ற மெடுத்து மழைதடுத்து
குழகா நந்தன் பெறுந்தவமே
பிச்சி தவனம் செறிமுட்டம்
பேரை குறுங்கை யிடபகிரி
பீடு கொழிக்குஞ் சேடமலை
பெரியோர் வழுத்து நெடுந்துவரை
கச்சிப் பதியு நின்று வக்குங்
கனகாம் பரனே தாலேலோ
கற்றோர் துதிக்குங் கள்வனே
தாலேலோ. (கூ).

32 பஞ்சை நிகர்க்குந் தளிரடியும்
பணியைப் பழித்த வெழமனையும்
படையைத் துரத்து மயில்விழியும்
பகரு மெழிற்கோ சலைமடமான்
நெஞ்ச மகிழும் வருங்களிறே

நித்தர் பாவு மெய்த்தவமே
நேமிந டத்துந் தசரதன்ற
ளிதியே நாளு முழங்கருதி
வஞ்ச மறலி யணுகாமல்
மயக்கு மிதர சமயநெடு
வாத ரிடத்தில் சேரா மல்
வரமு மதியுந் தருங்கள்வா
கஞ்ச மலராள் தனமுயங்குங்
கருமா முகிலே தாலேலோ
கற்றோர் துதிக்குந் திருவைகுந்தைக்
கனியே தாலேலோ தாலேலோ. (ய).

**மூன்றாவது தாலப்பருவம் முற்றும்.**

## (ஈ) சப்பாணிப் பருவம்

33 நங்கைபெறு மாறனிசை போற்றியுயர்
பாகவதர்
நவிலும்பிர பந்தமொருபால்
நாவலர்கள் பாவினிசை வேதவொலி
மாதர்சதி
நடனங்கள்பு ரிவதொருபால்
பங்கயன்மு தற்கடவுள் சங்கந்திரண்
டடிபணிந்து
கைகுவிப் பதொருபால்
பாராளும் மன்னவர்க ளோர்பால் வணங்கமகிழ்
பைந்துழாய ணியுமுதிலே
மங்கைகோ சலையினிரு கொங்கைவழி
பாலுண்டு
மதிவதன நோக்கியவடன்
மடிமீதி ருந்தன்ப ருளமேவி விளையாட
வருமாக தக்குன்றமே
சங்கரனு வந்துபுகழ் செங்கமலை மணவாள
சப்பாணி கோடியருளே
திருமலர்க் காவுசூழ் திருவைகுந்
தைக்கடவுள்
சப்பாணிக் கொட்டியருளே. (க)

35 நக்கவைமை மக்களனல வெற்புழுது
கிட்டுவளி
கண்ணமன் தெண்ணியொடி
நாற்றிசையு முட்டியினி யாற்றலரி
தெனவெண்ணி
நாரணாச ரணமிருநால
அக்கரத்து றைமூல காரணா சரணமறை
யாரணாச ரணமெனவே
யன்புடன் வழுத்தவா ணன்பிழை பொறுத்து
மகிழ்ச்சுதா பச்சைமாலே
இக்குமொழி மாதாம னைச்சிக்க முறுவேண்ட
யிரெடுத்துணவு கொண்டசோதை
யிருகணக ழிக்கவவ ளோக்கலைம
ருங்கிலிருந்
துலவுசெங் கனகமே
தகத்துறு வரசன்மேற் சக்கரந டாத்துமுகில்
சப்பாணிக் கொட்டியருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச் சோர
சப்பாணிக் கொட்டியருளே.. (உ.).

36 பூமன்னர்திரையிடச் சொமவெற் றிக்குடைப்
பொருந்தமாக தர்களேத்தப்
பூசுரசர்க ளாசிசொல வேசையர்கள் சாமரை
புரட்டவரி யாசனத்திற்
காமனெழில் கொண்டதெனமே வியுலகாண்ட
களைகண்ண

னேமித்த சரதன்
காமுற்றி யற்றுபெறு வேள்விப்பயன்
பெறக்கரு
திதுந்தரு ளுநிதியே
லயணியும் மாதுகோ சலையிரு
மலர்க்கரங் கொண்டெடுத்த
மஞ்சுதிகழ் பொன்மேனி நீராட்டி முத்தமிட
மகிழுங்கு ணக்குன்றமே
தாமரைப் போதிலுரை மாமருவு மணிவண்ண
சப்பாணிக் கொட்டியருளே..
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச் சோர
சப்பாணிக் கொட்டியருளே.. (ங.).

34 அந்தணர்கள் விண்ணவர்கள் வன்றுயர்
தவிர்க்கநீ
ளலைமோது திரைவீசுபால்
அமரத்து யிலமற்ந திம்பரிற்புகழ்
திருவயோத்தி
மாநகர் வந்தநாட
பந்துமுலை யிந்துநுத லிந்திரை யெனத்திகழ்
பசுந்தொடி புனைக்கைகேசி
பரதனிப் பாராள நீயடலி செல்லென்று
பாத்திபனு ரைத்தெனலுஞ்

நிந்தையு மனமகிழ்ந்துன் னுசனோடு
மிதிலைக்கண்
வருசெல்வியொடு நகர்சென்று
தெண்டக வனத்துமுத் தண்டிளஞ்
சோலைசென்று
மருவுங் கொண்டலே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச் சோர
சப்பாணிக் கொட்டியருளே.. (ச.).

37 மாசற்ற வெண்ணிறப்பாற் கடலி னடுவி
லொரும ரகதகிரி போலுநீ
வுனமாலை சூடியிரு மாதரடி வருட
மலர்விழியினி துயின்றமுகிலே
யீசர்க்கு முழரியிதழ் வாசர்க்கு மெட்டா
திருக்காதி யந்தநடுவும்
யெம்மைவி லைகொள்ளும றையோகிரா
மாநுஜனை
யெத்துநல் லோரிடத்துந்
தேசுபெற விளையாடி யானந்த நர்தனஞ்
செய்யுமப ரஞ்சோதியே
செகமீதாக் கர்குல மடிவிப்பதற் கென்று
சிலையேந்தி மகிழ்சிங்கமே
தாசரதி காகுத்த கோசலைபெ றுங்கண்மணி
சப்பாணிக் கொட்டியருளே

தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச் சோர
சப்பாணிக் கொட்டியருளே. (ரு.).

38 மதிவதன முறுவலும் கரவிநிகர் மேனியும்
மட்டுநிறை குல்லைமலரும்
மலைபொரு வுதோள்களுஞ் சிலைநுதற்
சுட்டியும்
மார்பிலகுக னகவடமும்
புதியநற் வெனவொழுகு கனிவாயி னூறலும்
புங்கமுங் கண்டசோதை
புளகித்தெ ருத்துச்சி மோந்துமப் பிட்டுமகிழ
போதமேஞா னரசமே
கதிபெறுவ தற்குதவு மிருமறையில்
உற்றபொருள்
காட்டுமண வாளமுனிவன்
கழலினைப்ப ணிந்துபழ வினையற்று
முத்திநெறி
கருதுபாக வதரென்றுந்
தியருள்முறை கின்றபதின மிதோழும்
மணிவண்ண
சப்பாணிக் கொட்டியருளே. (சு.)

39 மூவமறையோ துபாவத்து நிலைதேரிட
வெனமுனி பிருசென் றுமருவி
முளரிலர் பொருவுநின் மார்பத்து தைக்கவு
முனியா துசெங் காத்தாற்
காலினைத்த டவியவன்மா லினையகற்றி
யெக்காலு நித்திய னென்பதைக்
கருதியடி தொழவவாக் கருளும்மா
மணிவண்ண கஞ்சனுயிர்
கொண்டகளிறே
சீலக்குணத் துவசுதேன் றனக்குரிய
தேவகி தன்மன தின்புறச்
சிறுவர றுவரையு மொடிநொடியிற்
கொணர்ந்துத வுசிங்கமே யமரரேறே
தாலப்பெருந் துவசமாலி வென்றண்ணனே
சப்பாணிக் கொட்டியருளே.
தருமலர்க் காவுசூழ் திருவைகுந்தைச் சோர
சப்பாணிக் கொட்டியருளே. (எ.).

40 வம்பவிழ மலர்க்குழல சோதையில்வளர்ந்
தாயர்ம கவினுடனாததுரத்தி
வசக்கொடு விளங்கனி யெறிந்து
விழுவதுகண் டுவுற்றுமகி ழும்பரமனே
அம்பரத் துரையுமா ரிம்பரின்ம

னுத்தலைவ ரனைவருக்கு
மிடர்செய்திரும்
அசுரப்ப ருத்திப்பொ திக்கொரு
நெருப்பாக வவனிங்கு பிரகலாதனின்
கம்பலையு ரதுமனதின் பங்குளிர்ந்
துனதுகழ லிணைவழுத் தவவனாற்
காட்டுந்த லந்தொறு முதிக்கவுள்ளங்
கொண்டுக னகனைவ தைக்குமன்னாள்
தம்பத்து வந்துபே ரின்பங்கொ
டுத்தமுகில் சப்பாணிக் கொட்டியருளே.
(அ).

41 சீதஞ்செ ழுங்கமல வாவிக்கு
ளொருமுதலை செய்யவேதி
யனையீழ்க்கச்
சிலைவளைத் தம்முதலை தனைவென்று
புகழ்பெற்ற திறல்விசயன் முதலைவரும்
மாதர்க்கு ழேளினமிக் ககொதற்ற
கற்புடை மடமங்கை பாஞ்சாலியும்
மனதுகந் தடிபணிய அவர்மணங்
களிகூர்ம றைமுனிவர் தேவர்பிறரும்
நீதத்து டன்பாவு பாதஞ்சி
வப்பெய்த நெடுநகர்த்தூ துசெலுநாள்
மகிழநிம லாபரஞ் சோதியே

தாதவிழ்ம லர்க்குழல்சொ
தைபெறுசிங்கமே
சப்பாணிக் கொட்டியருளே.
தருமலர்க் காவுசூழ் திருவைகுந்தைச்
சோர சப்பாணிக் கொட்டியருளே. (சூ).

42. தினகரனு தித்ததென மணியழுத்துங்
கனகசிங் காசனத் திருந்து
செங்கோல்செ லுத்திமகு டாதிபதி
தசரதன் செய்யுமுற் பயனினாலும்
மனநலமு றும்பெரிய தவவிரத
வேதியர்கள் வானவர்கள் வெண்டலாலும்
மாயவினை வஞ்சனைசெ யுங்கொடிய
நிருதர்களை மடிவிப்பதற் குன்னியும்
நனிமிகுக்க ருங்குழலி கவுசலைதன்
மகவென்று நண்ணிவன மேவுமன்னாள்
நற்றவன்பண் ணியனசூ யையிரு
கையினாள் கையணிய ணிந்துவந்த
சனகியுடன் மருவியனு தினமுமகிழ்
மகாகுத்த சப்பாணிக் கொட்டியருளே.
தருமலர்க் காவுசூழ் திருவைகுந்தைக்
கடவுள் சப்பாணிக் கொட்டியருளே.
(ய).

நான்காவது சப்பாணிப் பருவம் முற்றும்.

## (உ.) முத்தப் பருவம்

43 சித்தர்புகழ் கேசவா நாரணா மாதவா
சீர்மருவு கோவிந்தனே
திகிரியணி விண்டுவே மதுசூத னாநெடிய
திருவிக்கிர மாவாமனா
அத்திமரு விக்கண்வளர் சீதரா தொண்டருக்
கருள்புரியு மிருடிகேசா
அயனைப்பெ றும்பத்ம நாபாதா மோதரா
அகிலகார ணாயெனக்
கொத்தவிழ் மலர்க்குழல சோதைபனி
மொழியினாற்
கூவிமடி மீதுபைந்துக்
கொஞ்சிமுலை யூட்டிநீராட் டிமகிழ்
வதுகண்டு
குறுமுறுவல் கொள்ளுமணியே
பத்தருடன் விளையாடு நித்தமுகில் வண்ணநீ
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (க.).

44 துட்டவல்ல ரசுரர்க ளையட்டல் புரிநெமியும்
சுரிசங்க மும்பாயலுந்
துன்னுமிளை யோர்களென நண்ணிவரு
வோமென்று
சுரர்களுக்க பயநல்கி
இட்டமொழி யெண்ணியே வட்டைநிகர்
கொங்கைதிக
ழெந்திளையெ னுங்கவுசலை
யினிதுவகை கொள்ளவவள் திருவயிறு
தித்துமகி
ழிறைவனே யெம்பிரானே
மட்டவிழ நறும்போதை விட்டுச்செ
ழுங்குல்லை
மருவிக்குழந் தையாகி
மல்லிவள நாட்டினுயர் வில்லிப்புத் தூர்வந்த
மாதினுக்கொ ருதந்தையாம்
பட்டர்கோ னடிகள்பணிசிட்டருள் மேவுமுகில்
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (உ.).

45 நீரத்தாங் கப்புணரி சூழ்புவி யிலைவாக்கு
நிற்கவோர டியுங்கொடேன்
நீதூது வந்ததிற் பயனில்லை யென்றாவ
நெடியகே தன்னிசைப்பப்
போர்த்தோழிந டத்திச்ச யத்திரத
னைக்கோலப்
புங்கமுறு கணைவாங்கவே
போகின்ற வழியிலுன் பாதமணி மலருமுன்
புண்டரீக னால்விளக்குந்
தீர்த்தடுஞ் சிரசிவிட் டகமகிழீ கிரிசனை
செய்யவிச யன்கணுற்றுச்
செப்புமவ் வரனுக்கு மீசநீ யென்றுணர்வு
தெளியவரு ளும்பரமனே
பார்த்தசா ரதியென்ற கீர்த்திபெறு கண்ணநின்
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (ரு.).

46 சங்கையில் லாதகலை கற்றவே தியர்களுந்
தன்னைவந்த டிவணங்கும்
தவநெறமுபு ரிந்துனது வரவுகண் டுள்ளமகிழ்
சவரிபூச னையுகந்து
துங்கமு ளமாருதிவ ணங்கஅவ னுக்கருள்
சுரந்துவள சோலைநண்ணிச்

சுக்ரீவ னுக்கபய மிக்குறவ ளித்தவன்
றுயர்துடைத்தி டவெண்ணியே
செங்கைவ ரிவில்வ ளைத்தொருப கழிகொண்
டடற்றில்வா லிதனைமடித்துத்
தினகரன் மகற்குமகு டங்கவித் தாட்கொண்ட
சிங்கமேயங் கணரசே
பங்கய மலர்க்கண்வரு மங்கையுறை மார்பநின்
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (ச.).

47 குடவளைய டற்றிகிரி கொண்டகை
யிரண்டினுங்
கோளகுழ லெடுத்தடவியிற்
கோவினிரை மன்சென்று மாயவிளை
யாட்டினது
கோலங்கள் காணவேன்றே
மடல்விரிந் துங்கமல மலருறை அயன்கருதி
வசுவினைமறைக் கவதுபோல்
மறுபடிய மைத்தவைகள் மனைமருவ
வுய்த்துமகிழ்
மதிவதன மதுசூதனா

கடகரிநெ ருக்கமென வுறுமிருள கற்றவரு
கதிரவன்வ யப்புரவியைக்
கட்டலிட வானமுகடு முட்டிவளர் சோளைசூழ்
கானகத்தொ ருமடுவினில்
படவரவி னுச்சமிசை நடனமிடு பொற்சரண
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (ரு.).

48. வாரகெழு முகொம்மைமு லையோதிக
ழுமைக்கதியன்
வாணியிறையும் பர்தலைவன்
வாதநெடு வாரிதிவ சுக்களன லதிக்கதியன்
வந்துலவு மிந்தாதவன்ன
சூரபகை தடிந்தகு கவேழசுரா முதற்கடவுள்
துய்யமறை யோர்தவத்தோர்
துன்புற்று நைந்துருகி முறையிட்டுவந்துனது
துணையடிவ ழுத்தியேத்த
நீரிலொரு கெழலெனமே வியவணுற் றேவரு
நிகரிலாப் பொற் கண்ணனை
நெஞ்சைப்பி ளந்துயிரை மறலிக்க ளித்தவுட
ணீண்டதிண்ம ருப்பினிடையே
பார்மகளை வைத்துமகிழ் சீர்பெறு வராகநின்

பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (சு.).

49 நச்சரவெ னப்போலி யிராவண னிலங்கைமா
நகரினிற்சி றையிருந்த
நங்கையலை முங்கிவர நம்பிமுனி
யைக்கண்ட
நானிலந டுக்கமுறவே
வச்சிரக ரத்தலைவன் முச்சிகையை
யிற்கடவுள்
வானவர்கள் புண்டரீகன்
வந்துநீ முந்துமறை யோதுபர னிவளுலக
மாதாவெனத் தெரிகிலாக்
கொச்சைமதி யுற்றநிரு தக்கிளையெ
னுங்கடல்
குறைத்தெமது துன்பநீக்குங்
கொண்டலெயிக் கதமினித் தவிரெனக்காங்
கூப்பிமகி ழுஞ்சிங்கமே
பச்சைமலை யென்னவொளி ரச்சுதம
னுத்தலைவ
பவளவாய்முத் தமருளே

பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (அ.).

வழரதமறை யோரும்பர மருவுசித் திரகூட
மேவியிளை யோன்மைத்த
மேலான பரமபத மாலினிலைக் கடலென
விளம்புபன் னகசாலையின்
மருவார்கு ழற்சனகி யருகேயி ருப்பமன
மகிழ்வொடுவி ளையாடுநாள்
மணிமுடிக லித்துன்னை யரியணையில்
வைத்தடி
வணங்கவென்றே கைகேசி
தருபுதல்வன் வருவதனை யமரபொரு
வதற்கென்று
தம்பிமுனி வுடனெழுந்து
தாரணி படைப்புணரி நீறேள மடிக்கவிடை
தரவேணு மென்றுகழற்ப்
பாதபள வருகொலத்தை வாதபா ரென்றமுகில்
பவளவாய்முத் தமருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந்
தைக்கள்வ
பவளவாய்முத் தமருளே. (கூ.).

51 வஞ்சியிடை பஞ்சினடி மிஞ்சுமெழில்
மங்கையுடன்
மருவுபண்ட வருமேகி
வன்முறையு நாளிருடி யுணவிக்கு தவிசெயு
மாமீதுமு திரபழத்தை
விஞ்சைநெறி கற்றவிறல் விசயனொரு
கணையேவி
விழவுய்த்த தனையறிந்து
மிக்கமறை யோன்வெகுளு மென்றமொழி
கேட்டவுடன்
வேருவியுன்னடி பணியவேஷ
யஞ்சல மினெனப்பு கன்றவர வர்களுற்ற
மனதாசை
யினையறை யுமெனலும்
ஆதிமுதலீ றுவரைசொற்ற பொழுத்தருவில்
அக்கனி
பொருந்தவ ருளிப்பஞ்ச
பஞ்சவர்ச காயனென மிஞ்சுபுகழ் பெற்றமுகில்
பவளவாய்முத் தமருளே. (ய.).

ஐந்தாவது முத்தப்பருவம் முற்றும்.

## (ஊ) வாரானை (வருகைப் பருவம்)

52 நிறையுங் கலைகள் மருவுஞ்சசியை
நிகர்த்த வதனன் வருகவே
நிருகன்சா பந்துடைந் துடைத்து மகிழும்
நிமலன் வருக வருகவே
நறைவண் டுளப மாலை யணியு
நம்பன் வருக வருகவே
நாரீ பாகன் வேதனே வாக்கு
நாதன் வருக வருகவே
உரியில் வெண்ணை திருடி யுண்ட
வுதரன் வருக வருகவே
உரல்பின் றோடர்த்த வழுங்கனக
வோங்கன் வருக வருகவே
மறைகள் பரவு முபய சரண
வரதன் வருக வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
மாயன் வருக வருகவே. (க.).

52 பாணிய மர்ந்த வேணியுங் காபா
லமுமுழுச் சூலலும்
பணியுங் கடுக்கை மாலை யுமழுப்
பாசுந் தரித்த கடவுளைப்
பேணித் தவசு புரியும் சுரன்பீ

டுமகிழ்ந் துகொடுவாப்
பெருமை தெரிய அவன்பின் றொடரப்
பிழைக்கு மிடங்க ணாடியே
சேணிற் றிரிந்த சிவனுக் கபயஞ்
சிறப்புற் றளித்த வவசுரனைச்
சீதைத் துயர்ந்து டைத்து நீவந்த
சீதாபரஞ் சோதியே
வானிக் கிறைவன் பூணும் பொற்பதன்
மாயன் வருக வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
மாயன் வருக வருகவே. (௨.).

53 சீதத் திவலை துளிக்கு மகரஞ்
செறிந்த கடலி னடுவினில்
தேவ ராலு மேவ வரிய
தென்னிலங் கைதன்னிலே
பூத மைந்து வேத நான்கு
புவனமூன் றுவிண்ணினிற்
பொருந்து கின்ற சுடரி ரண்டு
போதலமொன்றிவ வனைத்தையுந்
தாத விழ்ந்த பூவி யந்து
தங்குகின் றவயனையுந்
தந்த வன்னை சனகி யான
தையலைக் கண்டேனென

வாத மைந்தன் வந்து ரைக்க
மகிழு மாயன் வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
வரதன் வருக வருகவே. (ச.).

54. முதியோர ருந்தவர்கள் கதிசேர் நங்கை
செய்மொழியும் பிரபந்த மென்னும்
முன்னூலைய னுதினமு மேத்தியவ்
வழிகின்ற
மூச்சுகளே யல்லாது
நதியார்செ முழுஞ்சடிலன விதியோன்மு
தற்கடவுள்
அண்ணுதற் கெட்டாத்தாய்
நவிலுதற் கரிதான பரமபத நாதநீ
நானிலம் புகழ்வைகுந்தைப்
பதிமே வியர்ச்சா வதார மென்று
வந்ததைப்பாரோ ரறிந்துயந்திடப்
பழமறை யிலோது திருமந்தி ரத்துப்பொருள்
பகர்ந்துவெளி யிட்டசீமான்
எதிராச னடிபரவு மகியோர்க ளுளமருவும்
எங்கள்கண்ணன் வருகவே
இந்திர ருக்கருள் புரியு ஓமந்தை
வானிளவா சனிருடிகே சன்வருகவே.
(ச.).

54 வன்புல நடத்துருக மேந்திரிய மைந்துடமை
மருவு ஞானேந்தி ரியமைந்து
மடங்கா தவிட யநிகளீ ரைந்தினைச்
சேர்ந்துவளர் கின்றகாண நான்கு
சொன்னவோ ரிருபத்து நான்குப் பொருந்தீத்
துலங்குஞ் சடத்தி னுள்ளே
சோதிமய மாகவுறை யாதது நீயென்று
சுருதிசொலு மெட்டெ ழுத்தின்
சின்மயப் பொருளொதி யுலகைத் திருத்தி
மகிழ்தேசி கன்பெரிய நம்பி
சேவடி துதித்துத் தொழும்பரம பாகவதர்
சிந்தைம லர்மேவி யென்றும்
இன்ப மொடுவிளை யாடு மிறைவ
மாதவகண்ண யெம்பெருமநீ வருகவே
இந்தாருக் கருள்புரியு மெந்தை வானிள
வரசனி ருடிகேசன் வருகவே. (ரு.).

57 கருமுகில் முழக்கமென வருமிரத வோசையுங்
கடலெனத் திகழதானையுங்
ககனகோ ஷங்கள்மு தல்வெடி படவுரற்று
நெடுகைமதம் பொழிவேழமும்
பருதி வானவன் வயப்புர வியைநிகர்த்
தளவில்பல

குதிரையின் றிரல்களும்
பருவரை யொத்த புயவீர ருநெருங்கி
யெதிர்பாரதப் போர்தன்னிலே
யருதியுட னுன்னடி பணிந்துமகிழ்பாண்டவர்க்
காருயிர்த ரிக்கவுண்ணி
யம்பவ ளவாயில் வெண்சங்கு வைத்தூதி
யவ்வமரரைச் செயித்தமாலே
யிருநாலெ முத்திலு றைதிருமால் சோதைதரு
மிருகண்ணின் மணிவருகவே
இந்திரக் கருள்புரியு மெந்தை வானிள
வுரசனி ருடிகேசன் வருகவே. (சு.).

58 கொங்குகமழ் கோதைமலர் தங்குநற
வுண்டுகளி
கொண்டுலவு வண்டுமுரலுங்
கோகிலந விற்றுமிசை பாகினையி
யைந்தமொழி
கோகனக மான்பொருட்டுக்
கங்குலப கலற்றொளிப ரப்புக்க னத்திலுறு
கற்பகக்கா வைமருவி
கந்தமலி கின்றதரு வொன்றினையே
இக்கவது
கண்டகாவ லர்கள்சூழ்ந்து
சங்கையற வந்தமர்பு ரிந்தவர்கள் சாய்ந்திடச்
சங்கினோதை யைமுளக்கித்

தனமுகைநி றைந்துவரி பாரிசாத தத்தினைத்
தரைமீதுகொ ணருமுகிலே
எங்கள் குடிமுழு வதும்புங் கமுடன்
விலைகொள்ளு மீசநாரணன் வருகவே
இந்திரக் கருள்புரியு மெந்தை வானிள
வரசனி ருடிகேசன் வருகவே. (எ.).

59 ஓராழி பூணிரத மேலேயுல கிருளையொட்டு
மார்த்தாண்ட கிரணத்
தொளிபரவு புவிமுழுது மரசினை நடத்தி
யுய்ருத்திரன் பாதனென்னுந்
தாரார்பு யத்தண்ணல் சீர்திகழ்ம னைக்கிறவி
சாற்றியக டுஞ்சொல்லினாற்
றாமரை நிகர்த்தவிழி நீர்பொழி யநெஞ்சிற்
சலங்கொண்டு கானமருவி
நாராய ணன்பரம னீறாறு நாமமே
நன்மைதரு மென்றுமுவன்
நவிலுந் தவங்க ருதியக மகிழ்ந்து
அன்புபுரிநம்பனெ புருஷோத்தமா
ஈரேழு புவியினை யுமோர்பொழு தினுண்டு
மிமிருக்குமுதல் வன்வருகவே
இந்திரர்க் கருள்புரியு மெந்தை வானிள
வரசனி ருடிகேசன் வருகவே. (அ.).

60 சீர்மருவு வெண்கயிலை மேவிவல
முஞ்செய்து
தினமும்பணிந் துவருவோன்
செருச்செய வெதீர்த்தவா வலத்திலொரு
பாகமது
சேர்வரமுற் றதிறலோன்
நீர்கெழுபெ ரும்பாவை யெழுமதுசூழ்
புவிகளேழு
நெடுமலை களேழும்
நீலமுகி லேழுநிவை போலுடல மைந்துருகி
வந்தபுயவீ ரமுடையான்
பாரில்வளர் பூதங்க ளைந்திணையும்
மிகல்செயும்
பண்புபெற்று யர்வாலியாம்
பருவரைத னைக்கொல்ல இவனேதெ
னக்கருது
பருதிமகன மையலறவே
யேருலவு பகழிகொண் டோரெழும ரத்தினையு
மெய்தராக வன்வருகவே
பிந்திரருக் கருள்புரியு மெந்தை வானிள
வரசனி ருடிகேசன் வருகவே. (சூ.).

61 குயின்றவு கற்கண்டு பாகுக னியாளெனக்
கூறியமிடற் றினிசையுங்
குவளைகரு வண்டுகயல் இயல்பகழி
யாமெனக்
கூர்விழியு நீர்மருவிய
புயலெனத் திரளள கப்பந்தி யுங்கனகப்
பொருப்பைநிக ரிருகொங்கையும்
புண்டரீக வதனமும் புன்முறுவ லுங்கொண்ட
பொற்பிலக சோதைகுளிர
அயனரன்மு தற்கடவு ளண் டகோ
டிகள்பலவ
னைத்துமுத ரத்தினுள்ளே
யடங்குவ தையம்மா தினுக்குமு ண்காட்டி
யவள்மகிழ வைத்தமணியே
யியல்கொண்ட வயிணவர்கள் பயிலுபய
வேதமுத
லெம்பெரும நீவருகவே
இந்திரருக் கருள்புரியு மெந்தை வானிள
வரசனி ருடிகேசன் வருகவே. (ய.).

ஆறாவது வாரானை முற்றும்.

## (எ) அம்புலிப் பருவம்

62 தெண்டிரையி லுற்பவித்தும் பொன்மக
மேருவைத்
தினமும்நீ வலமாகவே
திகைத்தூத்தூத் திரிந்ததிலு நீங்காத
முயன்மறுத்
தீர்வொரு பாய்மதுகேள்
கெண்டைவிழி மாதர்குழல் கண்டுதம
ரென்றுழக்
கேறுவமுற்ற னவர்கமுங்
கேகயந டம்புரிதல் பாந்ததுவந் தாசையாற்
கெம்பீர மோடெழுந்து
கொண்டலக ழுமுழங்கி நெடுமாமலை
யிதாமெனக்
குலவுமெழில் மாடமேவிக்
கோமளம தாகநற் சங்குநிதி தானங்கள்
குவியவள மதுசுரக்கும்
அண்டர்ம னைசென்றுத் தியுண்டம
ணிவண்ணனுட
னம்புலி யாடவாவே. (க.).

63 உம்பர்தோ யிரவியின் புரவிதன் னயர்வினுக்
குரியநிழ லுதவியாற்றும்
உயர்மரச் சோலைசூ ழின்னகப் பொன்னனாருந்
தனைப்பார்த் துநாளுஞ்

செம்பவள வாயினொளி காலிட நகைத்து
சிரிப்பதற் கஞ்சியேகி
செய்யத வழ்வேழ்வி யிலுதித்தும் பயோத்தி
செழிக்கக்க டைந்தவன்னாள்த்
தம்பமென வேநின்று மிமையவர்கு
ழாத்தினொரு
தண்ணமுது முண்டுமகலா
சாரமாபக் கமுறுதேய தலதீர்த்த ருள்செயுந்
தகையர்ச்ச மயமிதுகேள்
அம்புலி புகழ்ந்துதொழு நம்பரந் தாமனுடன்
அம்புலியா டவரவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுட
னம்புலியா டவரவே. (உ.).

64 எஞ்சலில் லாதபட வரவினது நிழனால்
இதயமது வாட்டமுற்றே
எண்ணிப்பு லர்ந்துமன துடகுதல் தவிர்ந்துநீ
யின்பமொடுச் சிதமதாய்
மிஞ்சுபு கழ்கொண் டுனதுப ரப்பியே
மெக்குற்று யாச்சியாகி
மிக்கான வேதியர்கள் தேவர்கள் துதித்திடும்
மேன்மைபெற வெண்டிலிதுகேள்
குஞ்சரமி ளைத்தாதி மூலமென் றோலமிடு

குரலுக்கி ரங்கியன்னாட்க்
குவலயத் தேவருநின் றதிசெயத் தெற்றிடக்
குருமணிப் புள்ளிலே
யஞ்சலென வந்துதவு செஞ்சக்க ரத்தனுடன்
அம்புலியா டவரவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுடன்
அம்புலியா டவரவே. (ஙு.).

65 காதுதோய்ந் தெகுமிழ்ம றித்திடவு லாவிமிளிர்
கண்ணினைத னினமெனத்தென்
கண்டனுகி யிடைபொறா தெனவுருகு
மெழில்மேவு
கன்னியர்கள் ரேழுமுன்றனைக்
கோதைகமழ் மாதர்தங் கொழுந்தர்பி
ரிகாலையில்
கொடியதழ லெனவேசிருங்
குறைநீங்கி யனுதினம தண்மதியெ னப்பொருவு
குணமருவு சமயமிதுகேள்
சீதமலர் பொழிநறவு கனிகள்பி திரசாரொடுஞ்
சோந்துமத கூடுபாயும்
திருவழுதி நாடனென குலமதனை
விலைகொண்ட
செங்கமலை வாழுமார்பன்
ஆதிமறை தேடரிய சோதிரெகு னாதனுடன்

அம்புலியா டவரவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுடன்
அம்புலியா டவரவே. (ச.).

67 மன்னுமெழி லம்பிகையை வாமமதில்
வைத்துஉலவு
வர்தனது செனனமேவி
வாழ்ந்தலு நீங்காத வன்பகைத விர்த்தருளி
வானவர்கள் கண்டுவாழ்த்த
தென்னிலங் காபுரியி லுன்னொளி
செலுத்திடச்
செயத்தைவி யந்துன்னிநீ
செங்கமல வாவியரு கூற்வளைக ளிறுநிறை
செவ்விமிகுந் தாளந்தனைக்
கன்னல்செறி காவிலிவாழ் குருகுதன்
சினையெனக்குக்
குருதியேய டைக்கிடக்கும்
கவினமிகுந் தோங்குபுகள் திருவழுதி
நாடனுயர்
கமலாச னன்பாவிடும்
அன்னவுரு வாகிமறை சொன்னநங்
கண்ணருடன்
அம்புலியா டவரவே

அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுடன்
அம்புலியா டவரவே. (ரு.).

68 பாவைகூ ழுரகினை விழக்குசெங் கதிரவன்
பண்புபெறுமொ ழியினழலைப்
பணிநிலவு வீசிவெப்பாற் றியுஞ் சமரமுகப்
பாசறையில் வாகைசூடி
வருமிளைஞர் புயமதில்த் தனமுயங்
கப்புணரு
மாதருக்க முதாகவே
வளமைபெற் றும்பயிர்க் குறுதுயா மின்றியே
வளரும்படிக் குதவியும்
இருவிருளை யொட்டியுந் தகைபெற்ற
வுன்னையே
யேம்பிரான் கூவவாரா
திருப்பது பெரும்புகழ்க் கொக்குமோவா
தலாலெழி
லாரசோதை மகவாம
அரவினணை மருவியுறை பரமபத நாதனுட
னம்புலியா டவரவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுட
னம்புலியா டவரவே. (சு.).

69 பார்புகழு மாதவர் கள்தேடப் பொற்பதப்
பரமனென்று ணருந்ததி
பாண்டனுக்கு யர்கதிகொ டுத்ததுமி
ருண்டமுனி
பாலர்க்குநெ றியுதவியும்
மாரன்தனை யானைநகு மெழில்பொருவு
பாஞ்சாலி
மருமருவு குழல்முடிக்க
மாற்றவரை வென்றுமகிழ் எம்பிரான் கூவநீ
வந்திடிலு னக்கென்றுமே
சீர்திகழு மீரமுறை சோடசநி றைந்தகலை
சோவருள்செ யுமாதலாற்
செம்பவள முல்லைமலர் வாய்முறுவல்
என்னுமத்
தேவகீபெ றும்புதல்வனாம்
ஆரமொடு மாமகளை மார்பிலணி
கண்ணனுடன்
அம்புலியா டவரவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுடன்
அம்புலியா டவரவே. (எ.)

69 பூரணக் குடமெனப் பொலியும்ப யோதரப்
பொற்பிலக சோதைமகவாம்
புங்கவ னுனக்குவ ருந்நதுத லதவித்துப்
பொருந்துகலை யீய்வதற்குக்
காரண சேலைசெறி நீர்பெருகு வாவிநிறை
கஞ்சமல ரென்னவோமருங்
காதவங் கொண்டுமதி வாவென்ற ழைத்திடக்
கருதிவா ராததென்னோ
வாரணத் துரிவையி னைமேனி யிற்போர்த்த
சிவன்வாணியிறை யும்பர்தலைவன்
வந்தடி தொழக்கரு ணையுந்தும் பிரான்கமலை
வாழுமணி மார்பனெங்கோன்
ஆரணத துறையுமிந் நாரணக் கடவுளுட
னம்புலியா டவரவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலியா டவரவே. (அ.).

70 பழமறை தொழும்பரம் புருடனென் றறியாது
பண்டுசிசு பாலனென்பான்
பகர்கின்ற விசயனுக் ககமுன்னி யவனுடல்
பதைத்துவிழ வேவிடுத்துந்
தழலெரியெ னும்பங்கி யிருள்செறிவு
மேனிநிமிர்

தானவர்கள் கிளைமுழுவதுந்
தரைப்படம டித்ததுவு மோரதி கிரிசெங்காந்
தனிலிருப்ப தையறிந்தும்
மழவிடையெ னத்திகழும் மாயனுனை
வாவென்று
வாயிதழ்ம லர்ந்துகூவ
வாராதி ருக்கில்கூ ராழிவி டுவனென
மனதெண்ணி யின்னேரமெ
யழகுபெறு செங்கமலை யுளமருவு கள்வனுட
னம்புலியா டவரவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுட
னம்புலியா டவரவே. (சூ.).

71. சென்னலங் கழனிவள நாடனென கோன்மலர்த்
திசைமுகன் வணங்குதேவன்
தேவகி புதல்வ வாவென்ற ழைத்திடச்
சீருடன்வி ரைந்துவநதால்
முன்னைநீ செய்தவினை யால்வருந் துயரெலா
முற்றவும கற்றிநாளும்
முழுமதி யெனப்பொரு வவாமீயவனிதன்றி
மூவுலகி னுஞ்செலுத்தத்
துன்னுகி ரணங்கள் செறிசெங் கதிர்கள்
தோன்றியதெ னத்திகழ்வுறுந்
தூயதான நித்தியவி பூதியினு முன்னொளி

துலங்கவருள் செயுமாதலால்
அன்னைதிரு மாதினு ளமன்னுநங் கண்ணனுட
னம்புலியா டவரவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண
வாளனுடன்
அம்புலியா டவரவே. (ய.).

**ஏழாவது அம்புலிப் பருவம் முற்றும்.**

## (ஏ) சிற்றில் பருவம்

72 வானோர் குழவும் வாக்கிறையு
மதிசே கரனுந் திசைமுகனும்
மலரா லருதச்சித் தடிவணங்கி
மாலெ கள்வனெ னத்துதித்து
மேனா ளுனைவந் திரங்தற்காய்
விரல்சேர் மாலி சுமாலிதனை
மேவிய மர்செய் திடக்கருதி
விளங்குங் கருடப் புள்ளேறி
தானே யெதிர்த்த வாக்காதம்மை
செயித்த வுவப்போ ருவுக்குமணி
தனத்தில் முயங்குங் கறுவிதமோ
தகைந்து விளையாட் டழிக்கின்றாய்
கானார் கமல மானவருங்
கழலாற் சிற்றில் சிதையெலே
கந்தங் கமழுந் திருவைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையெலே. (க.).

73 வடம்பூ ணமுலை யுநுடங் கிடையு
மதிபோ லமுக முஞ்செங்காந்தள்
மலரைப் பொருவுங் கரதலத்தில்
வதிந்த பங்க யல்விழியும்
பட்டம ரமெனச் சோறாடிதடமும்

பாகு போன்ற பனிமொழியும்
பருவ முகில்நொ குழலுமெனப்
பகரு மெழிலும் பயிர்ப்புநிறை
மடவார் நதியின்க ரையருகே
மணலைக் குவித்து மனமுவந்து
வளைந்த விளையாட் டிதைமருவி
மாலே யழித்த லவழக்கன்று
கடல்சூழ் புவியோர் தினம்பணியும்
காலாற் சிற்றில் சிதையேலே
காலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழுந் திருவைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையேலே. (உ.).

74. முருக்கின் மலர்பொ லித்ழிக் கினிவாய்
முல்லை முறுவ லாச்சியிரு
முலையி னமுதந் தனையூட்டி
முகத்தோ டணைத்து முத்தமிட்டு
புரியு மரைகாண் காப்பணிந்து
போலன் றாதிறைத் துத்தாலாட்டும்
பொன்னூ சலிற்கண் வளராமல்
புனிற்றா நிரைபின் போகாமல்
அரியின் குரல்நேர் மொழிமடவா
ரறியாப் பேதை மதியாலே
யமைக்கு மழகரா மாழிகையை

மழிக்கக் கணக்கோ வனுதினமுங்
கருதுந் தவத்தோர் சிரம்பணியும்
கழலாற் சிற்றில் சிதையெலே
கந்தங் கமழுந் திருவைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையெலே. (ங.).

75. வண்டோ கயலோ மரைப்போதோ
வாளோ கணையோ யயில்வேலோ
மானோ விடமோ நறுங்குவளை
மலரோ வெனச்சொல் லிருவிழியும்
பண்டோ யிசையும் பொருந்துமெழில்
பாவைமடவார் பலர்கூடிப்
பணிக்கு மணலின் விளையாட்டைப்
பாமா லழித்த லுன்னழகுக்
குண்டோ பெருமை யன்னாளி
லுளத்தே குறித்து மதியாமல்
ஒருபோ தினிலுங் கருதாமலு
லவித்தி ரிந்த பாமரனாங்
கண்டா காணக்குக் கதியறித்த
கண்ணா சிற்றில் சிதையெலே
கந்தங் கமழுந் திருவைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையெலே. (ச.).

76 அல்லைப் பழித்த நிறத்தர்க்கா
டங்கன் மடியக் கணையேவி
அமரர் துயரந் தனைத்துடைத்த
வடங்காக் களிப்பேர் மழுராமன்
வில்லை வளைத்த பெருந்திறலோ
விரும்பு மறையோ னுளமுவப்ப
வேண்டும் பசுவி னிரையளித்த
மென்மைப் புகளோ பழவடியார்
தொல்லை வினைக்கட் டறுக்குமனத்
துணிவோ திரையார் பொருளைந்தித்
துறையின் மடவார் விளையாட்டைத்
துதைப்பென் னுஞ்சொற் குறிப்பறியேன்
கல்லை யுருவாக் குங்கமலக்
காலாற் சிற்றில் சிதையெலே
கந்தங் கமழுந் திருவைகுந்தைக்
கள்வர் சிற்றில் சிதையெலே. (ரு.).

77 மானோ விழிக்கஞ் சனமெழுதி
வதியும் பிறையை நிகர்நுதற்கு
மறுப்பொற் சாந்துதிலதமிட்டு
வயங்குங் கனகச் செம்பெனலாய்த்
தானே வளரு மினமுலைக்குச்
சந்தங் கமழுஞ் சேறணிநது
தபனன வருதோப் புரையல்குற்

றடத்தை மறைத்துக் கலையணிந்து
நானஞ் செறிந்த குழன்மடவார்
நளினம் பொருந்து நதிக்கரையில்
நனிமா டங்கள மைத்தனை
நண்ணி யுதைத்த லுனக்கழகோ
தேனார் துளவத் தார்மார்பஞ்
சிறியெஞ் சிற்றில் சிதையெலே
செகத்தோர் பரவும் திருவைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையெலே. (சு.).

78. நுகருஞ் சுதையுந் தேனுவையு
நுவலுஞ் சசியுங் கற்பகமும்
நோன்பு புரியிந்தி ரருக்குதவி
நோதல் தவிர்த்த பெருமானே
மகர நெடுங்கண் விதுவதன
மடவார் பொருனைத் தடமருவி
மணலைக் குவித்து மணிமுறத்தில்
வாரிப் பாலை யர்கொழித்து
நிகரில் கனக மரகதமு
நிவந்த மலரு மதினணிந்து
நிதிபோல் மகவைப் பெற்றெடுத்த
நின்பேர் புனைவே னெனக்கருதிச்
சிகரி யமைத்துக் கரங்கூப்புஞ்
சிறியெஞ் சிற்றில் சிதையெலே

செகத்தோர் பரவும் திருவைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையெலே. (எ.).

79. நிவந்து பனைத்து முலைமடவார்
நேசத் துடனுண் மணர்க்கொணர்ந்து
நெடிய மாட மெனவளைந்து
நின்னைப் பணிமா ழிகைக்கண்டாய்
பவள விதழுங் குறுங்கையும்
பங்கே ருகம்போ லிருவிழியும்
படைத்த கமலை யடிவருகும்
பனித்தா ளிதனி லிலுறுத்தாமல்
உவரித் திரைசூழ் புவியனைத்து
மும்பர் கணமு மவர்க்கிறையும்
ஊம்பர் மாதவ ருமைங்கரனு
முருவின் பதியுங் குகவெழஞ்
சிவனு மயனுந் தொழுங்கழலாற்
சிற்றில் சிதையெலே
செகத்தோர் பரவும் திருவைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையெலே. (அ.).

80 அனம்பொன் மடவார் நதிக்கரையி
னருகே மணற்கொண் டாடாங்கும்
அழகா ரமதில் சூழ்வெதிகை
யும்மைத்து மலர ருச்சனைசெய்

துனையெ தொழுதாட் செய்வோமற்
றொன்றுங் கருதோ மெனயுளத்தில்
உன்னிப் பணிமா ழிகையிதனை
யுதைத்தல் பெருமைக் கழகன்றே
வனையும் பாசந் தனைத்துறந்த
மதியோர் கதிர வதற்குரிய
மறையிற் பொருளைத் தமிழ்விரித்த
மாறன் திருவாய் மொழியுரைத்துத்
தினமுங் கருதுஞ் சேவடியாற்
சிறியெஞ் சிற்றில் சிதையெலே
செகத்தோர் பரவுந் திருவைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையெலே. (சூ.).

81 கரைக்கு ளடங்காப் பெருவெள்ளக்
கடலின் நடுவோர் கருமலையிற்
கமலம் பூத்த தெனத்திகழுங்
கண்டா னாரி றைஞ்சுதற்குப்
பொருந்தும் போத விழியழித்த
புனிதர் மனுவின் குலதிலக்கர்
பொன்மா மேருக் கிணையாகி
புடைத்துப் பனைக்கு மிருதனமும்
மருவார் குழலும் செவ்விதழும்
மன்னு மடவார் நதிக்கரையில
வளமா ழிகைசெய் தலங்கரித்து

உளவ னப்பே கருதியாச்சிதுச்
சிரத்தா லிறைஞ்சித் தினம்பணியும்
சிறியெஞ் சிற்றில் சிதையெலே
செகத்தோர் பரவுந் திருவைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையெலே. (ய.).

**எட்டாவது சிற்றில் பருவம் முற்றும்.**

## (ஐ) சிறுபறைப் பருவம்

82. இந்துநுது னத்துமிட றுந்துமுலை செந்துவரி
தழக்கவுரி யென்னுமயிலின்
இன்பமுறு சங்கரனு மீரெ்ழுபெ ரும்புவியை
யீன்றமலர் தந்தவயனுந்
துந்திமுக னுங்குகனு மிந்திரன்மு
தற்றலைவர்
தாபதர்கள் மாருடனுன்
சன்னிதிநெ ருங்கியைவா கனனிருக
ரங்கொண்டு
தலைமிசைகு வித்துமகிழ
மந்தரகி ரியுநெடுவிந் தமலையுந் திகழும்ம
ருவுபயவீ ரமுடையான்
வஞ்சனைக்கஞ் சனெனுநஞ் சினுமிகுங்
கொடியமட
நெஞ்சன்ம னைவாயிலிற்
சித்துறக்க ளிரட்டநந் தனருள்பால் நீசிறு
பறைமுழங் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழக் கியருளே. (க.).

83. நந்தைநிகர் கண்டமுந் தத்தைமொழியுஞ்
செய்யநளி
னமெனம ருவுகரமும்
நறைமலர்க் கோதையுந் திகழெழில்
சோதையெனு
நங்கைமடி மீதுவைத்துக்
கெத்தலரு மல்லியிரு வாட்ச்சிசிறு
செண்பகங்குல்
லைமறுமுல் லையுடனே
கொங்குவிரி பிச்சிகழு நிர்முகை குருக்கத்தி
கொண்டணிய மகிழ்கண்ணனே
நித்தநீ மற்றெவை யுநினதேயெ னக்கருதி
நெஞ்சிலறி வுற்றெனதெனும்
நெடிதான மமதையாங் காரத்தை விட்டுமன
நேசமொடு பணிசெய்யவே
சித்துனக் குரியதெனுமுத்தருள் நின்றகள்வ
சிறுபறைமுழக் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழக் கியருளே. (உ.).

84 மறையோமா ருண்டவிழி நறவைப்பொ
ருந்துமொழி
மருவார்செ றிந்தகுழலாம்
மலையைச்செ றுக்குமுலை சிலையைக்க
டிந்தநுதல்

மதியைப்ப ழிக்குமுகமாம்
இரதிக்குவ ருகணவன் உருவொத்தி
யைந்தவிடை
யிரத்ததை யெயல்குலாம்
எழில்மேவ சோதைதிரு மனைமேவி
விளையாட
யின்புற்றி ருக்குமன்னாட்
புரையுற்ற மடநெஞ்ச வஞ்சனைக்
கஞ்சன்விடு
போரமல்லா தமைமடித்துப்
புங்கமு டன்கம கிழுமிங்கித குணாளனே
புனிதமறை யோர்க்குமுதலே
திரைமோது முத்தமிரு கரைசேர்ந
தித்துறைவ
சிறுபறைமுழங் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங்
குலநாத
சிறுபறைமுழக் கியருளே.
(ங.).

85 மலைபோல்வ யங்குநெடு புயவீர மண்டுதிறல்
வானரப்ப டைதிரட்டி
மணியார திரைக்கடலி னருகேயி ருப்பதனை
மருவுவீட ணன்தந்து

கலையோது மறையவர ருந்தவர்கள்
விப்பிரர்கள்க்
கனமுறைவோர் புவியுளோர்
கருதியடி தொழுகின்ற மாதுசா னகியின்மேற்
காதலைத்த விர்தியென்றே
யலைவிலா நற்புத்த் சொல்லினுங்கே
ளாதகந்தி
கழுநிரு தர்கோவை
யறவிட்டு வந்துனைப்ப ணியுமவ்வீ டணர்க்கப
யங்கொடுத் தகளிறே
சிலைபொருவு நுதலிகௌ சலைமகி ழுமேகமே
சிறுபறைமுழக் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழக் கியருளே.

(ச.).

87. இக்குவல யத்திருளையப்புரம கற்றவொரி
ருதமிசைவ ருமிரவியை
யின்சுவையு றுங்கனிய தாமெனம னங்கருதி
யிருவிசும் பூடுபாய்ந்துந்
தக்கமுனி யோகியர்கள் பூசுரர்கள் விப்பிரர்கள்
சாற்றுமறை யின்பொருள்முதல்த்
தருநவவி யாகரண சகலகலை யினையும்மத்
தபன்னமூன்ற டைத்தகற்றும்
மிக்கான புகழ்பெற்ற மாருதித னக்குவர

மேன்மையுட னீய்த்தமுகிலே
விண்ணவரு மம்புயனு மாதவனும் ஐங்கரனும்
மேருவில்வ ளைத்தசிவனுந்
திக்கதிப ரும்புவியின் மக்ககளுமி
றைஞ்சுமுதல்
சிறுபறைமுழக் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழக் கியருளே. (ரு.).

86. பாதிமதி வெணியான வாழகிரியை வேரோடு
பறித்தநிரு தரதிதபதியின்
பத்துமுடி வைத்ததலை அற்றுவிழ வுற்றமரா
பக்தியொடி றைஞ்சுபரமர்
வேகமுட னொடுநதி யாமெனவி ரைந்துவயல்
மேவிவளர் சூழ்கழனியுஞ்
சூதமர மீதுதளிர் கோதுகுயில் கூவியது
துப்பினிதழ் இந்துவதனத்
தொகையரெ னக்கருதி யாடவர்வி யந்துமருள
சோலையும்நி றைந்தமிதிலைச்
சீதைபுது வைக்கணவ ருகோதையிரு
வர்க்கிறைவ
சிறுபறைமுழங் கியருளே

சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழங் கியருளே. (சு.).

88 சண்டவேகம் பவனனென மண்டிமா மேருமுடி
சாய்ந்தபேரோ சையெனவுந்
தாரபதியா பாசறையில் வாகைபுணை
வெற்றியைச்
சாற்றுமணிமு ரசமெனவும்
மண்டலநி றைந்தபுகழ் கொண்டமுதல்
வற்றியோர்
வாயில்கடை முன்றிலெங்கும்
மனமோடு வந்துநிதி தருகுவோ மென்றுஉரை
வளங்குபேரி கையென்னவுங்
கொண்டல்க ளொலிப்பதென் றெண்டிசைக
டோறுமயில்
கொண்டாடிந டனமிடவுங்
குணபாலு றுங்கிழவன் விரைவோடு பவனிவரு
குஞ்சரக்கு முறலெனவுந்
தெண்டிரையி னாற்பெனக் கண்டவர்வி
யக்கவுஞ்
சிறுபறைமுழக் கியருளே
சென்னல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறைமுழக் கியருளே. (எ.).

89 அடலுறு புயவலி கொண்டிடு மாபலி
யன்போட ளித்தபுனல்
அங்கைவி ழாமுன்ன டத்திட வுன்னியோ
ரளியென வருபுகரின்
கடைசிறு வரிபொரு நெடுவிழி திகழுறு
கருமணி யைச்சிதறிக்
கணமென வுரைநவில் பொழுதிலி ருபுவி
கால்கொண்ட ளந்தவனே
படைபொரு சிலைநுதல் துடியிடை யெனவரு
பாவைய சொதைதரும்
பாலனெனுந் திருநாம மணிந்தகோ
பாலனெ னும்பொருளே
குடவளை யாழித ரித்தக ரங்கொடு
கொட்டுஞ்சி றுபறையே. (அ.).

90. இங்குத நயமுறு லீலைவி ரும்பிய
இடைதுவடி மங்கையரும்
யிரதிமு யங்கிய கணவனெ னத்திகழெ
ழிலுறுமைந் தர்களாங்
கங்குலி லன்போரு செய்கல் வித்தொழில்
கருதியு வப்புமனே
கார்தவ ழாமிய மீதினி ருந்து
காங்கொடி யாள்நெருடிச்
செங்கனி வாயிதழ் கொண்டுந வின்றிடு
சில்லிசை கெட்டசுணந்

தினமுநெ ருங்கிய நவமணி மேடை
சிறந்தந கர்க்கதிப
கொங்கவி ழகோதைய சோதைதன் னமுதே
கொட்டுக சிறுபறையே
கோக னத்துறை மரமகிழ் கள்வா
கொட்டுக சிறுபறையே. (கூ.).

91. செகதல மருவியவுயிர்களை வேரோடு
தின்றிடு மரவுரவோர்
சிகையெரி பங்கினர் புகைசொரி கண்ணினர்
செல்லென வார்ப்புடையோர்
அகமொடு வஞ்சனை கொலைபுரி வன்தொழி
லடல்சேரு நடலைவிறல்
ஆன்மைபொ ருந்திய நீலநி றத்தினர்
அரக்கரை வென்றிடவே
ககனமு றமரர்கள் மனநின வின்படி
கானக மேவிடுநாள்
கங்கைந திக்கரை யின்கணெ திர்ந்திரு
கழலிணை யடிபரவுங்
குகனுடன் நண்புசெ யிகலரி யேறே
கொட்டுக சிறுபறையே
கோக னகத்துறை மாமகிழ் கள்வா
கொட்டுக சிறுபறையே. (ய.)

ஒன்பஃதாவது சிறுபறைப் பருவம் முற்றும்.

## (ஓ) சிறுதேர்ப் பருவம்

92 பாவாரு மின்சொன்மொழி எழில்மாத
சோதைதரு
பாலனென்ற வதரித்துப்
பாண்டவர்கள் தூதனெனும் நீண்டபுகழ்
கொண்டுலவு
பாவாக தேவகண்ண
தாவாத புயவலி பெறுந்திரி புரத்தவுணர்
சண்டவே கத்தினோருஞ்
சகலபுவ னமுமுற்று நலிவுசெய் திடுங்கொடியர்
தங்களைம டிப்பதற்காய்
ஆவாகி வில்லின்விடு மேவாகி யுள்ளத்த
மர்ந்துறையு மீசனாகி
யவ்வமா முடிக்கப்பு ராந்தக னெனும்பேரை
யாக்களித் தருளிய
தேவாதி தேவனெனு மூவர்மு தற்றலைவ
சிருதேரு ருட்டியருளே
சீதாதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதேரு ருட்டியருளே (க.).

93 சுந்தரம டந்தைபுவி மானிவர்க ளிருவருந்
துணையடிப் பொதுவருடத்
துய்யபாற் கடல்நடு விலறிது யிலமர்ந்து
துறந்துமட மாதசோதை
தந்தசே யெனவந்து கலைபயிலு நாளின்மறை
தனையுரைசெய் வித்தகுரவன்
றக்கணைக்கா கவவன் மகவினைக்
கடல்சென்று
தகைபெற்ற முன்னுருவுடன்
அந்தணர்க் கீய்ந்தமன வன்றுயர்
துடைத்தருளு
மண்ணலேநீ லமுகிலே
அனுதினமு நின்னடி பணிந்துனது நாமத்தை
யன்புடன்வ ழுத்தியேத்தச்
செந்தமிழ் எனக்குதவு பைந்துளப மார்பநீ
சிறுதேரு ருட்டியருளே
சீதாதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதேரு ருட்டியருளே (உ.).

94. உருத்திரர்க ளாதவர்கள் வசுக்கள
கவனியென்று
மோதுமுப் பத்துமூவர்
உவந்துதொழு மமபோற்று வார்கையில்
இன்பமொடு

ருக்குமணி மாதினுடனே
மருக்கமழு மலரணையி ருந்துவிளை
யாடுநாள்
மனதன்பு டன்குசேலன்
வந்துத வும்வலி னையொருக்கால்
அருந்தியே
வடதிசைக்க திபனிகராய்ப்
பெருநிதிபெறக்கருணை யருளியவன்
வறுமையைப்
பெயர்வித்த கற்பதருவே
பிதகம ணித்திரகள் போதுதிரை கரைமருவு
பெட்பும்மிகுபொ ருனைநதிசூழ்
திருவழுதி வளநாட கருடனமிசை வருகண்ண
சிறுதேரு ருட்டியருளே
சீதாதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதேரு ருட்டியருளே (ங.).

95. குந்திபெறு மைந்தர்க ளிலிந்திரன் மகன்சமர
குறித்திரத மீதுநிற்பக்
குணபாலெ ழுந்துவரு கதிரோனும் வந்துதரு
கோடைமிக்க திறல்மன்னன்முன்
முந்தைமறை யோனுருவெ டுத்தவனி
டஞ்சென்று
மூவுலகு மிசைநிற்கவே

முற்செய்த நற்பயன னைத்தையும்
கைகொண்ட
மூவர்முதற் கடவுளே
யிந்துலவு செஞ்சடையுமைந்துமுக முந்திகழு
மீசன்மலரா சனன்முதல்
எவ்வுயிரி னுள்ளுமுறை யாதிபா நீயே
எனக்எனக்கருதிய றிவையுணர்வோர்
சிந்தைகுடி கொண்டுமகிழ் எந்தைகோ விந்தநீ
சிறுதேரு ருட்டியருளே
சீதாதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதேரு ருட்டியருளே (ச.).

96 கஞ்சமலர் மேவுமிறை செங்கதிரு ருக்கள்சசி
கங்கைசடை வைத்தகடவுள்
ககனமுறுதேவர்முத லனைவரையு
மோர்பொழுது
கம்பலைசெய் வித்தமுனிவன்
விஞ்சைமறை யாகமமு தற்கலைகள்
சொற்றமுறை
வேள்விசெய வுற்றபகலில்
இருக்குடைய தாடகையை வீழ்த்திச்சு
வாகுவினை
விண்ணுலக மீதிலேத்தி
வஞ்சனை கொடியமா ரீசனைக் கடலினுன்

மறைந்திடும்ப டிவிரட்டி
மதில்சூழு மிதிலைப்ப திக்கரசன்
மாளிகையில்
வருசனகி தன்பொருட்டுச்
செஞ்சிலைவ ளைத்தந்த வஞ்சிகைபி
டித்தநிதி
சிறுதேரு ருட்டியருளே. (ரு.).

97 துய்யமறை யோர்மருவு பஞ்சவடி தன்னிலே
தோன்றிம றையாகின்
மனைவியைப் பிரிவுசெய் வுன்னிவரு
நிருதியைத்
துங்கமுள் தம்பிகண்டு
நேய்கின்நி றைந்தவுடை வாளுருவி
யவருடைய
நேடியகா திதமுடனே
நிமிர்கொங்கை நாசியிவை தனையரிய
வக்கொடிய
நீலிசூர்ப்ப ணகியலறி
அய்யகோ வென்றலறி யிட்டடிப ணிந்தவனை
அன்னைநமுயார் கோலுரையென்
றம்பவள வாயினிற் புண்முறுவல்
கொண்டருளி

யகமகிழு மொருசிங்கமே
செய்யவளை மார்பிலணி துய்யவணி
வண்ணநீ
சிறுதேரு ருட்டியருளே
சீதைபுகழ் வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதேரு ருட்டியருளே. (சு.).

96 கலைமதிநு தர்சனகி சிறையுறையி
லங்கைநகர்
காணமுன்னீ ராசனைக்
கருதியுவ சித்ததிலு மதியாத் திருந்ததைக்
கண்டுகணை யொன்றெவவே
மலையைநிகர் புயவருணன் உள்நொந்து
நைந்துருகி
வாடியிரு கண்பணித்து
வந்தடிவி ழக்கருணை யுந்தியப் பகழியினை
மருவுகாந் தாரதிவிற்
கொலைநடலை வஞ்சனைசெ யுங்கொடிய
நிருதரின்
குலமறுத்தி டவிடுத்துக்
கோளரியெ னப்பொருவு மாருதிமு
தற்றலைவர்
கொண்டுதவு குன்றமென்னுஞ்

சிலைகொண்டு கடலினை யடைத்துமகிழ்
காகுத்த
சிறுதேரு ருட்டியருளே
சீதைபுகழ் வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதேரு ருட்டியருளே. (எ)

99. காற்சிறக் கோதையும் மதிபொருவு வதனமுங்
கச்சடங் காத்தனமுங்
கமலவிழி யுங்கொண்ட சனகியுந் தம்பியுங்
கதிரவன்பெ றும்தலையும்
ஏருலவு வானரத் தலைவருஞ் சேனையும்
இலங்கையர சன்றன்றுடனே
யெதிபரத்து வனுறையு மினிதான சரிலயினில்
யெய்தியவ னாலமைத்த
வார்சுவையி னொட்டிசில போனகமு
ணக்கருதிவாய்
மடுத்துற்ற பொழுதில்
வந்துதொழு மாருதியை யெந்தனுட
னுண்ணநீ
வாவென்ற ழைத்துமகிழுஞ்
சீர்மருவு தாரணியி ராகவகோ
விந்தநீர்கவகோ
சிறுதேரு ருட்டியருளே
சீதைபுகழ் வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதேரு ருட்டியருளே. (அ.).

100 மாகத் தமரும் புத்தெளிர்
மறையோர் தவத்தோர் தமைக்காத்து
மகிழ்வோ டிருத்தக் கருத்திலுன்னி
மனுவின் குல த்தி லவதரித்தே
யூகப் படைகொண் டணைதிருத்தி
யுவரிக் கடலப் புறமெய்தி
யோங்கணி காக்கு மதிலிலங்கை
யுறையு மாக்கர் தமைமடித்து
வேக முடன்புட் பகமெய்து
மிதிலை மடமான் றன்னுடனே
மேவிப் பதிவந் தரசுரிமை
விருப்புற் றளிக்குங் காகுத்தன்
கோக நகைக்கும மாவிக்குங்
கொழுநன் றடந்தே ருருட்டுகவே
குருகை முனிவன் பணிவைகுந்தை
குட்டந் த டந்தே ருருட்டுகவே. (சூ.).

101 பகலோன் கிரண மெனத்திகழும்
பச்சைக் கொடிஞ்சி யுருளமைத்துப்
பகரு மறையோர் நான்கினையும்
பரியா யினைத்துப் பழவடியார்
நிகர்க்கு நதிய ருள்மலரை
கெடிய கயிராய் வடம்பூட்டி
நேசத் துடனே பிடித்திறைஞ்ச
நிமலா சரண மெனக்கருதி

யகமும் புறமுங் களிப்புடனே
யன்பாற் பணிந்து பங்கயனார்
ஆரா தனைசெய் துவந்தேத்த
வானார் தொழுது மனமகிழச்
செகத்தோர் செறிந்து கரங்குவிப்ப
செம்பொற் றடந்தே ருருட்டுகவே
திருமா துறையுந் தென்வைகுந்தைச்
செல்வன் தடந்தே ருருட்டுகவே (ய.).

**சிறுதேர்ப் பருவம் முற்றும்.**

<u>வாழிய</u>

102 திசைமுகன் வணங்குதென் வைகுந்தை
நாதனிரு
சேவப் பொதுவாழி
செங்கமல மாதுபுவி மாதுநீ ளாதேவி
சேனேசனிவர் கள்வாழி
யிசைமருவு தமிழ்வேத நவிலுநா வீரன்முத
லீரைந்துபேர் கள்வாழி
எங்கள்குடி வழியடி மைகொண்டு மகிழசாந்
தூரனி னைமலர்த்தாள் கள்வாழி
யசைவிலா நற்பொருளை வெளியிட்ட
பூதூர்னம்
பொற்பதங் கள்வாழி

யரிதான முத்திக்கு வித்தான நஞ்சீய
ரழகுபெறு கழல்கள்வாழி
வசையற்ற நோன்புபுரி மாதவர்கள் பூசுரர்கள்
மன்னவர்ம னுக்கள்வாழி
மன்னுமணி வண்ணனிசை பன்னுபிள்
ளைத்தமிழ்
வழங்குசெந் தமிழ்வாழியே.

## அவையடக்கம்

சூ சு ய ச இ

கார்த்தகைமீ உஉ குருவாரமும் ரேவதிநக்
ஷத்திரமுங் கூடினஙசுபயோ கசுபதினத்
தில்சுவாமி கள்ளப்பிரான் பிள்ளைத்த
மிழ்சீதா ராமபா கவதன்கு மாரன்கோ
விந்ததா சனுக்கு எழுதிமு டிந்தது.

## கடவுள் வாழ்த்து

103. பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புனிதவேதா கமமெலாம்
புருஷோத்தன் றொய்வமென் பதும்பூசு ரர்கள்
பொருந்துமந் திரகர்மருந்
தேமேவு மலர்மங்கை மார்பில்வ ளர்சீருஞ்

செகந்தனைக்காத் தருள்வதுந்
தேவர்மு தல்மிருக செந்துபட்சி லீலைமாமுஞ்
செழிக்கப்பதந் தருவதும்
பரமேவு பொருளலங் காரஞ்சி றப்பதும்
பலவிதமும் நீயென்றதாற்
பரதெய்வ முண்டென்றி ருப்பார்க ளென்னூல்
படித்தவித மோதெரிகிலேன்
மாமேவு பைந்துள மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்க டராயனே. (க.).

## அந்தணர் சிறப்பு

104 பூமேவு சீலமிகு மாகமபு ராணமனு
நீதியுந்தேர்ந்து மெஞ்ஞானநிறைவார்
செய்கின்ற யாகாதி மந்திரக ருமங்களாற்
தேவர்க்கு முதலிசெய்வார்
காலமுத லாதிய பிரமாணங் கள்கையினிற்
கனிபோலவே காட்டுவார்
காயத்திரி மகிமையாற் சகலதீ வினையெலாங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசை திங்களும் மாரியுங் கொற்றவர்
நடத்துசெங்கோல் வளமையும்
நாடுகள்செ ழிப்பதுஞ்ச கவதருமங்
களும்வேத

நாயகர்ம குத்துவங்காண
வாலகரு டனபண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்க டராயனே. (உ.)

## வணிகர் சிறப்பு

திடமுடன் தன்மனத றிந்துவா ணிபமதே
செய்வார தாளமிஞ்சி
செலவுசெய் வார்யாவர் வருகிலுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடகுதந் தாலும்மரி யாதையில் லாருக்க
ரைகாசு கடனுமுதவார்
ஆனமனு நீதியுடை யோர்களுரை
வாய்மையால
ளுவிலாப்பொ ருள்பொடுப்பார்
கடுகுதனி லெட்டிலொரு கூறுவா யெனினுங்
கணக்குமுறை தன்னில்வழுவார்
கார்யவி சேஷமதி லொருகோடி யுதவுவார்
கருணைவாத்த காபெருமைகாண
வடமலைதி னம்பரவுந் தென்மலைக் கதிபனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்க டராயனே. (ச.).

## அரசர் சிறப்பு

106 சீருலவு மனுநீதி மந்திரிசொற் தனபுத்தி
தேசத்தி யாகைநான்குந்
தேர்ந்துசெவி விழிமனது மூன்றிலும்
பொறுமையே
சேர்ந்துசெங் கோல்செலுத்தும்
காருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
சார்நதுமலர் கின்றவிதமும்
தந்தியொ டுமுதலை பொருதான
பலமுங்கண்டு
குரியலரை வெற்றிகொண்டு
பாருலவு கெடிசேனை தனதானி யஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன் மங்களொடு கீர்த்திப்பி ரதாபமும்
படைத்ததிற லோன்அரசனாம்
வாருலவு மலர்மங்கை மனமகிழுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்க டராயனே. (ரு.).

**வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ், நூல் முற்றும்**

## பாடல் முதற்குறிப்பு அகரவரிசை


| பாடல் அடி | பாடல் எண் |
|---|---|
| அ | |
| அங்கண் விசும்புறை தேவர் | 22 |
| அடலுறுபு யவலிகொண் | 89 |
| அண்டர்தவ வேதியர்கள் | 4 |
| அந்தணர்கள் விண்ணவர்கள் | 36 |
| அல்லைப் பழித்த | 76 |
| அனம்பொன் மடவார் | 80 |
| ஆ | |
| ஆதவ னைத்தொடு | 19 |
| இ | |
| இக்குவல யத்திருளையப் | 86 |
| இங்குத நயமுறு | 90 |
| இசையுந் திருவும் | 27 |

இந்துநுத னந்துமிட 82

ஈ

ஈரேழ்பெரு புவனமெங்கு 9

உ

உம்பர் தோயிரவியின் 63

உருத்திரர்க ளாதவர்கள் 94

எ

எஞ்சலில் லாதபட வரவினது 64

ஓ

ஓம்நமோ நாராயணாவென்று 6

ஓராழி பூணிரத மேலேயுல 59

க

கஞ்சமலர் மேவுமிசை 96

கருமுகில் முழக்கமென 57

கரைக்கு ளடங்கா 81

கலைசொச்சியைப் பொருவு 26

கலைமதி நுதுற்சனகி 98

கா

காதுதோய்ந் தேகுமிழ் 65

காவிலுறைமுவையிசை 17

காவுறை மந்திய ர்ந்திட 18

காற்நிறக் கோதையும் 99

கு

குடவளைய டற்றிகிரி 47

குந்திபெறு மைந்தர்களி 95

குயின்றவு கற்கண்டு பாகுகனி 61

கோ

கோங்குகமழ் கோதைமலர் 58

ச

சங்கத்தமாநக் கிடையூறு 24

சங்கையில 'லாதகலை கற்ற 46

சண்டவேகம் பவனனென 88

சந்தனக் காவுதிகழ் 12

சி

சித்தர் புகழ்கேசவா 43

சீ


| | |
|---|---|
| சீதச்செ ழுங்கமல வாவிக்கு | 41 |
| சீதத் திவலை துளிக்கு | 54 |
| சீருலவு மனுநீதி மந்திரிசொற் | 105 |
| சீர்மருவு வெண்கயிலை | 60 |


சு


| | |
|---|---|
| சுந்தரம டந்தைபுவி | 93 |


செ


| | |
|---|---|
| செகமல மருவிய வுயிர்களை | 91 |
| செகமீது சேதனர்களுய்ந்து | 11 |
| செமபொன்னி னின்பநிறை | 2 |
| செய்யதிருவாய்ப் பாடி | 29 |
| செய்யதேமாப்பல | 5 |
| சென்னலங் கழனிவள நாடனென | 71 |


த


| | |
|---|---|
| தண்டாம ரைப்பூந்த | 28 |


தி


| | |
|---|---|
| திசைமுகன் வணங்குதென் | 102 |
| திடமுடன்தன் மனதறிந்து | 106 |
| திருவும்பொன் மேயு | 7 |

| | |
|---|---|
| தினகரனு தித்ததென | 42 |
| **து** | |
| துட்டவல்லரசுரர்களை | 44 |
| துய்யமறை யோர்மருவு | 97 |
| **தே** | |
| தேண்டி ரையிலுற் பவித்துப்பொன் | 62 |
| **ந** | |
| நக்கவைமை மக்களனல் | 34 |
| நங்கைபெறு மாறனிசை | 33 |
| நச்சரவெ னப்போலி | 49 |
| நத்ததைநிகர் கண்ட | 83 |
| நந்தன் மனைவ்து | 16 |
| **நா** | |
| நான்முகனை நராயணன் | 8 |
| **நி** | |
| நிவந்து பனைத்து முலைமடவார் | 79 |
| நிறையுங் கலைகள் மருவுஞ் | 52 |
| **நீ** | |
| நீரத்தாங் கப்புணரி சூழ்புவி | 45 |

நு

நுகருஞ் சுதையுந் 78

ப

பகலோன் கிரண மெனத்திகழும் 101

பச்சைப் பெருந்துங்குழன் மடவார் 31

பஞ்சை நிகர்க்குந் தளிரடியும் 32

படவாளர்வம் பூங்கதலி 30

பழமறைதொ ழும்பரம 70

பா

பாணியமர்ந்த வேணியுங் 53

பாதிமதி வெணியான 87

பார்புகழு மாதவர்கள் 68

பாவாரு மின்சொன்மொழி 92

பாவைகூ ழுலகினை 67

பூ

பூமன்னர் திரையிடச் 35

பூமாது கருபைொழிசீர் 13

பூமேவு சீலமிகு மாகம 104

பூமேவு திசைமுகனை 103

பூரணக் குடலமெனப் பொலியும் 69

பூவல யத்துள 20

ம

மங்கையர் கொங்கை 21

மதிவதன முறுவலு 38

மதியை நிகர்த்ததிரு 23

மண்ணுயிர்கய்ய 10

மலைபோல் வயங்கு 85

மறையோ மருண்ட விழிநறவைப் 84

மன்னுமெழி லம்பிகையை 66

மா

மாகத்தம ரும்புத்தெளிர் 100

மாசற்ற வெண்ணிறப் 37

மானோ விழிக்கஞ் சனமெழுதி 77

மு

முதியோர ருந்தவர்கள் 55

முப்பரஞ் ரோதிதனை 3

முருக்கின்ம லர்பொலி 74

முல்லை முறுவல் பவளயிதழ் 25

மூ

மூவமறை யோது பாவத்து 39

மே

மேதினிப்பர் மதுதீர 15

வ

வஞ்சியிடை பஞ்சினடி 51
வடம்பூ ணமுலை யுநுடங்கிடையு 73
வண்டோ கயலோ மரைப்போதோ 75
வம்பவிழ மலர்குழல் 40
வன்புல நடத்து கருமேந் 56

வா

வார்கெழுமு கொம்மைமுலை 48
வானோர் குழவும் வாக்கிறையு 72

வி

விரதமறை யோரும்பர 50

வு

வுருவநைந்து புவிமாது 14

முதற்குறிப்பு அகரவரிசை முற்றும்

T.7229
T.7229